விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 03 சனிக்கிழமை (19.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 275

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## வலம்புரி பத்திரிகை விநியோகஸ்தர் மீது கந்தரோடையில் வாள்வெட்டுத் தாக்குதல்

### மோட்டார் சைக்கிள், கைத்தொலைபேசி என்பன அபகரிப்பு



(யாழ்ப்பாணம்)

வலம்புரிப் பத்திரிகை விநியோகஸ்தர் மீது இனந்தெரியாத கும்பலொன்று வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திவிட்டு அவரது மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்தொலைபேசி என்பவற்றை அபகரித்து தப்பிச் சென்றுள்ளது.

இச்சம்பவம் சுன்னாகம் கந்தரோடை வெளியில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் இணுவிலைச் சேர்ந்த 47 வயதுடைய குடும்பஸ்தரான பா.மதனகரன் என்பவரே படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 23

### அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக

# தியாகி திலீபனுக்காக தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைவு

### முன்னணி மட்டும் இணைந்து செயற்பட மறுப்பு



(யாழ்ப்பாணம்)

**இறந்தவர்களை நினைவு கூருவது அம் மக்களின் அடிப்படை உரிமை. தியாகி திலீபனை நினைவுகூர விடாமல் ராஜபக்ஷ அரசு நீதிமன்றம் மூலம் தடை விதித்துள்ளது.**

**அரசின் இவ் அடக்குமுறைக்கு எதிராக அனைத்துத் தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என நேற்று முடிவெடுத்தன. எனினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டும் இணைந்து செயற்பட மறுத்துவிட்டது.**

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை தடுக்கும் விதமாக அஞ்சலிக்கும் உரிமைகளை தடுப்பதை எதிர்கொள்ள மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை ஆராய தமிழ்க் கட்சிகள் நேற்று யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடின.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பங்காளிக்கட்சிகள், ஜனநாயக போராளிகள், தமிழ்தேசிய பசுமை இயக்கம் ஆகியவற்றின் தலைவர்கள், பிரதிநிதிகள் நேற்றைய 23

## பகிரங்கமாக சொல்ல முடியாத விதமாக மோசமான பாலியல் இம்சை இடம்பெற்றுள்ளது

### 4 மாணவர்கள் உடனடியாக இடைநிறுத்தம்

### யாழ்.பல்கலை துணைவேந்தர் சிறிசற்குணராஜா

(யாழ்ப்பாணம்)

பகிரங்கமாக பொதுவெளியில் கூறமுடியாதளவு மோசமான பாலியல் இம்சைகள் இடம்பெற்றுள்ளது எனவும் அதனுடன் தொடர் புடைய 4 மாணவர்கள் உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.சிறிசற்குணராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு 23

## அரசியல் சாராத மக்கள் இயக்கமாக செயற்படுவதற்காக

### பேரவையின் இணைத் தலைமையிலிருந்து விலகினார் நீதியரசர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

அரசியல் சாராத மக்கள் இயக்கமாக தமிழ் மக்கள் பேரவை தொடர்ந்து செயற்பட வேண்டும் என்பதற்காக பேரவையின் இணைத் தலைவர் பதவியிலிருந்து நீதியரசர் விக்னேஸ்வரன் விலகினார்.

தேசிய ரீதியான நெருக்கடிகள் தமிழ் மக்களுக்கு உருவாகும் போது, கட்சி சார்பற்ற வகையில் அதனை 23

வெடி பொருளுடன்

## கிளாலி பகுதியில் இருவர் கைது

(முறிகண்டி)

வெடிபொருட்கள் வைத்திருந்த சந்தேகத்தில் நேற்று மாலை இருவர் கிளாலி பகுதியில் பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ம-3,100)

## கட்டப்பிராயில் விபத்து குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கட்டப்பிராய் பகுதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கல்வியங்காடு ஆனந்தபுரம் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயாரான சுபேசன் பவானி (வயது-33) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

கட்டைப்பிராய் பகுதி ஊடாக பிரதான வீதிக்கு மோட்டார் சைக்கிளை செலுத்த முற்பட்டபோது பிரதான 23

### பேரவை மக்களின் இயக்கம்

## தமிழ்க் கட்சிகள் பேரவையில் இணைந்து செயற்பட வேண்டும்

### மாவைக்கு அனுப்பிய கடிதத்தில் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

"ஜனநாயகம் மற்றும் மனித நேய பண்புகளுக்கு கிஞ்சித்தும் இடமளிக்காமல் தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுவரும் தமிழ் 23

# லங்கா சம சமாஜ கட்சி

வர்க்க விடுதலையின் மாவீரன்
தோழர் N.M. பெரேராவின்

## 50ஆவது நினைவுதினம்



இடம்
பிள்ளையார் விருந்தினர் விடுதி,
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
திகதி : 19.09.2020
நேரம் : பி.ப 4.00 மணி

**தலைமை**

பேராசிரியர் **திஸ்ஸ வித்தாரண** (பா.உ)
தலைவர் - ல.ச.ச.கட்சி



**நினைவுப் பேருரை**
கௌரவ பேராசிரியர்
**பொன். பாலசுந்தரம்பிள்ளை**
முன்னாள் உப வேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்

**மலர் அஞ்சலி**
**கௌரவ வீ. ஆனந்தசங்கரி**
தலைவர் - தமிழர் விடுதலை கூட்டணி

**கௌரவ திருநாவுக்கரசு ஸ்ரீதரன்**
தமிழர் சமூக ஜனநாயக கட்சி
**வை. நடராஜா மூதவை உறுப்பினர்**
ல.ச.ச.கட்சி

**கௌரவ கலாநிதி M.P நடராஜா**
தலைவர் - அக தேசியம் முற்போக்கு கழகம்
**கௌரவ மறவன்புலவு சச்சிதானந்தம்**
தலைவர் - சிவசேனை

**கௌரவ இரா. பேரின்பநாயம்**
முன்னாள் எதிர்க்கட்சி தலைவர்
அமரர் அ. அமிர்தலிங்கம் அவர்களின் செயலாளர்
**கௌரவ கலாநிதி கந்தையா சிவராஜா**
**கௌரவ கா. கோபாலகிருஸ்ணன்**
விரிவாக்க முகாமையாளர் - பனை அபிவிருத்திச் சபை

அனைவரையும்
அன்புடன்
அழைக்கின்றோம்.

அழைப்பாளர்
கலாநிதி சிதம்பரம் மோகன்
நினைவு குழு சார்பாக
077 603 0507

(4012)


## வவுனியாவில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(வவுனியா )

வவுனியா பன்றிக்கெய்தகுளத்தில் சட்டவிரோத துப்பாக்கியுடன் ஒருவரை கைது செய்துள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம்பற்றி தெரியவருவதாவது,

வவுனியா பன்றிக்கெய்தகுளத்தில் வீடு ஒன்றில் சட்டவிரோதமாக துப்பாக்கி (இடியன் துவக்கு) ஒன்றினை மறைத்து வைத்திருப்பதாக ஓமந்தை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலினையடுத்து குறித்த துப்பாக்கி மீட்கப்பட்டதுடன் அதனை தமது உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ம-03.299)




ஈழத்துச் சீரடி சாயி நாதனின்
14ஆவது வருட உயர் திருவிழா

**கொடியேற்றம்**
**19.09.2020 (இன்று ) மாலை 5.30 மணி**

**குங்கும அர்ச்சனை**
**27.09.2020 மாலை 6.30 மணி**

**வேட்டைத் திருவிழா**
**28.09.2020 மாலை 7.00 மணி**

**சப்பை ரதம்**
**29.09.2020 மாலை 7.00 மணி**

**தேர்த் திருவிழா**
**30.09.2020 காலை 7.00 மணி**

**தீர்த்தத் திருவிழா**
**01.10.2020 காலை 10.00 மணி**

**அடியவர்கள் கைகள் கழுவி முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியுடன் உற்சவத்தில் கலந்து கொள்ளலாம்.**

314, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம், இலங்கை.
தொ. பே : 077 722 2568

(4018)

**ஆலயத்தினர்**



# உடனடி வேலைவாய்ப்பு

01- Video editor (Adobe Premiere)
02- News editors (Website Update)
03- Social Media Updaters
04- News Presenter
05- VJ
06- Administrative Officers
07- Translator - (English to Tamil ) - (Sinhala to Tamil)
08- Marketing Manager

☎ - 076 245 5533
✉ - hr.samugam@gmail.com

(4015)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## வாடகைக்கு வீடுகள், கட்டடங்கள் தேவை

எமது மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய பெரிய வீடுகள், கட்டடங்கள் தேவைப்படுகின்றன. திருநெல்வேலி மற்றும் மருதனார்மடத்திலுள்ள இராமநாதன் நுண்கலைக் கழகத்துக்கு அண்மித்த பகுதிகளில் இலகுவாகப் பயணம் செய்யக்கூடிய வகையில் உள்ளவாறு வீடுகள் கட்டடங்கள் தேவைப்படுகின்றன.

| இல. | விபரம் | தேவைப்படும் தகைமைகள் |
|---|---|---|
| 01. | அறைகளின் இடஅ | குறைந்தது 100 மாணவர்களாவது தங்கக்கூடியவாறு இருத்தல் வேண்டும். |
| 02. | குளியல் அறைகள | குறைந்தது 10 |
| 03. | மலசலகூடங்கள் | குறைந்தது 10 |
| 04. | சைக்கிள், மோட்டர் சைக்கிள் தரிப்பிடு | போதுமான அளவு |
| 05. | தண்ணீர் வசதி | போதுமான அளவு |
| 06. | மின்சாரம் | தடங்கலின்றி வழங்கக்கூடியதாக இருத்தல். |
| 07. | பொது இடம் | மாணவர்கள் கல்வி கற்பதற்கானது. |

வீடுகளை, கட்டடங்களை வாடகைக்கு தர விரும்புவோர் கீழ்வரும் மாதிரிப் படிவத்தில் தயார் செய்யப்பட்டுப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பிரதிப் பதிவாளர்/ பொதுநிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் எனும் முகவரிக்கு 02.10.2020 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "மாணவர்களின் உபயோகத்துக்கான வீடு, கட்டடம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

- தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கங்கள்: 021 222 6517, 076 605 9563

**பதிவாளர்.**

பிரதிப் பதிவாளர்/ பொதுநிர்வாகம்
யாழ். பல்கலைக்கழகம்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பயன்பாட்டிற்கான வீடு/கட்டடம்

மேற்படி விடயம் தொடர்பாக தங்கள் ……… ஆம் திகதி பத்திரிகை விளம்பரத்திற்கு அமைவாக எனது பின்வரும் வீட்டை/கட்டடத்தை பல்கலைக் கழகத்திற்கு வாடகைக்குத் தர விரும்புகின்றேன்.

வீடு/கட்டடம் பற்றிய விபரங்கள்

1) வீடு/கட்டடம் அமைந்திருக்கும் இடம் …………………………………
2) வீடு/கட்டட சொந்தக்காரரின் பெயரும் அவரது நிரந்தர முகவரியும் ……………
3) தொடர்புகொள்ள வேண்டியவரின் பெயரும் முகவரியும் தொலைபேசி இலக்கமும்
   பெயர்:………………………………
   முகவரி: ………………………………
   தொலைபேசி இல: ………………………
4) வீட்டின்/கட்டடத்தின் பரப்பளவு ………………………
5) வீடு அமைந்துள்ள காணியின் பரப்பளவு: ………………………
6) அறைகளின் எண்ணிக்கை ………………………
7) குளியல் அறைகளின் எண்ணிக்கை: ………………………
8) மலசல கூடங்களின் எண்ணிக்கை: ………………………
9) சைக்கிள், மோட்டார் சைக்கிள் தரிப்பிடவசதி: போதுமான அளவு (உண்டு/இல்லை)
10) மாணவர் கல்விகற்பதற்கான பொது இடம்: (உண்டு/இல்லை) ………………
11) மின்சாரவசதி: உண்டு/ இல்லை விபரம் ………………………
12) தண்ணீர் வசதி: கிணறு/குழாய் நீர் விபரம் ………………………
13) எதிர்பார்க்கும் குத்தகை/ மாதாந்தவாடகை………………………
14) குத்தகைக்கு தரக்கூடிய கால அளவு………………………
15) வேறுயாதாயினும் கட்டுப்பாடுகள்/நிபந்தனைகள் (இருப்பின்) ………………
16) வீடு/கட்டடம் அமைந்துள்ள காணியின்
   a) உறுதியின் நிழற்பிரதி ………………………
   b) நிலஅளவைப் படத்தின் நிழற் பிரதி ………………………


எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகைத் தொகையானது அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்ட வாடகைத் தொகை மற்றும் குறித்த வாடகை ஆகியவற்றின் அடிப்படையில் பேசித் தீர்மானிக்கலாம் என்று இணங்குகின்றேன்.

திகதி……………………  ……………………
விண்ணப்பதாரரின் கையொப்பம்

(C-351)

# மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க அரசாங்கத்திற்கு தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்



(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று குறிப்பிட்டுக் கொண்டு இந்தியா பலவந்தமாக செய்து கொண்ட ஒப்பந்தத்தால் எவ்வித பயனும் ஏற்படவில்லை. மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க அரசாங்கத்துக்கு தொடர்ந்து அழுத்தம் பிரயோகிப்போம் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் பேராசிரியர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அரசியலமைப்பின் 20 ஆவது திருத்த சட்டமூல வரைபில் இனங்காணப்பட்ட குறைபாடுகளை ஜனாதிபதிக்கு அறிவித்தோம்.

எதிர்பார்க்கப்பட்ட பல ஏற்பாடுகள் மீண்டும் மீளாய்வுக் குழுவினரால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. குறைபாடுகளுடன் அரசியலமைப்பு திருத்தம் செய்யப்பட்டால் மைத்திரி- ரணில் தலைமையில் செயற்பட்ட பலவீனமான அரசாங்கமே தோற்றம் பெறும்.

அரசாங்கம் தவறான வழியில் செயற்படும் போது தவறுகளைச் சுட்டிக்காட்டும் பொறுப்பு நாட்டு மக்களுக்கு உண்டு. பெரும்பான்மையின மக்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை பலமாக ஸ்தாபித்துள்ளார்கள். ஆகவே அரசாங்கம் என்றும் மக்களின் கருத்துக்களுக்கு மாத்திரமே முன்னுரிமை வழங்க வேண்டும்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற இராஜாங்க அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர குறிப்பிடும் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ள கூடியது. மாகாண சபை முறைமையால் இந்த நாட்டுக்கு எவ்வித நன்மையும் ஏற்படவில்லை. அரசாங்கத்துக்கு வீண் செலவுகள் மாத்திரமே மிகுதியாகின. நிறைவேற்றுத்துறையின் பிரதிநிதியான ஆளுநர்களினால் மாகாண சபைகள் சிறந்த முறையில் நிர்வகிக்கப்படுகிறது.

புதிய அரசியலமைப்பின் ஊடாக 13 ஆவது திருத்தம் முழுமையாக இரத்துச் செய்யப்படும் என்பதை உறுதியாக குறிப்பிட முடியும். இத்திருத்தத்தை இரத்துச் செய்வதால் இராஜதந்திர மட்டத்தில் எவ்வித நெருக்கடிகளும் ஏற்படாது.

இலங்கை ஒரு இறையாண்மை மிக்க நாடு. எமது நாட்டின் அரசியலமைப்பு சார் விடயத்தில் பிறிதொரு நாட்டை தலையீடு செய்ய வைத்தமை தவறான செயற்பாடாகும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு என்று குறிப்பிட்டுக் கொண்டு இந்தியா 13 ஆவது திருத்தத்தை கொண்டு வந்தது. இத்திருத்தத்தினால் இனப்பிரச்சினைகளுக்கு எக்காலகட்டத்திலும் தீர்வு கிடைக்கப் பெறவில்லை. இத்திருத்தத்தை முழுமையாக இரத்துச் செய்ய அரசாங்கத்துக்கு தொடர்ந்து அழுத்தம் பிரயோகிப்போம்.

நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளில் இருந்து விடுபட அரசாங்கத்துக்கு முழுமையான அதிகாரமும் பாராளுமன்ற பலமும் தற்போது உள்ளது. அவை முழுமையாக இனிவரும் காலங்களில் செயற்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-7)

# புலிகளால் முடியாததை புலம்பெயர்ந்தோர் முடிப்பர்

## புலம்புகிறார் ஞானசார தேரர்

(கொழும்பு)

புலம்பெயர் புலிகளும் அதிகளவில் இரட்டைக் குடியுரிமை கோரி விண்ணப்பித்துள்ளனர் என்றும் பிரபாகரனால் செய்ய முடியாததை பாராளுமன்றத்தில் தமது பலத்தை உருவாக்குவதன் மூலம் அவர்களால் செய்ய முடியும் என்றும் பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு சென்றிருந்த ஞானசார தேரர் அங்கிருந்து செய்தியாளர்களிடம் பேசிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது பேசிய அவர், இரட்டை குடியுரிமை பெற்றவர்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவாகும் வாய்ப்பை புதிய அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக வழங்குவதன் மூலம் விரைவில் சீனர்களும் இலங்கையின் இரட்டைக் குடியுரிமையை பெற்று பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பார்கள். இலங்கை சீனாவின் காலனியாக மாறி வருகிறது.

17 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரித்தவர்கள், 18 ஆவது திருத்தச் சட்டத்தையும் ஆதரித்தனர். 18 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரித்தவர்கள் 19 ஆவது திருத்தச்சட்டத்தையும் ஆதரித்தனர்.

தற்போது அவர்களே 20 ஆவது திருத்தச் சட்டத்தையும் ஆதரிக்க தயாராகி வருகின்றனர். இதுதான் எமக்குள்ள பிரச்சினை.

தற்போது கிடைத்துள்ள மக்கள் ஆணையை பயன்படுத்தி கடந்த காலத்தில் செயற்பட்டது போல் எவரும் செயற்பட முயற்சித்தால், அது வரலாற்று ரீதியாக செய்யும் தவறு. குறிப்பாக இரட்டைக் குடியுரிமையை எடுத்து கொண்டால், 25 இலட்சம் ரூபாவை வங்கி வைப்பில் காட்டி சீனர்களும் இலங்கையின் குடியுரிமை பெற்று இலங்கை பிரஜை எனக் கூறி பாராளுமன்றத்திற்கு வர முடியும்.

அத்துடன் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ஒருவரும் இதனைச் செய்ய முடியும். அதே போல் இந்திய பிரஜையும் பாராளுமன்றத்திற்கு வர முடியும்.

நாட்டின் மீது அளவு கடந்த அன்பு இருந்தால், ஏன் குடியுரிமையை இரத்துச் செய்துவிட்டு நாட்டில் அரசியலில் ஈடுபட முடியாது? புலம்பெயர் புலிகளும் அதிகளவில் இரட்டைக் குடியுரிமை கோரி விண்ணப்பித்துள்ளனர்.

பிரபாகரனால் செய்ய முடியாததை பாராளுமன்றத்தில் தமது பலத்தை உருவாக்குவதன் மூலம் அவர்களால் செய்ய முடியும்.

கொள்முதல் மற்றும் கணக்காய்வு விடயங்களை எடுத்துக்கொண்டால் மிகவும் பாரதூரமான இடத்தில் 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் காணப்படுகிறது.

ஒரு குடும்பத்திற்கு ஏற்ற வகையில் இதனை செய்ய முடியாது என நாங்கள் நினைக்கின்றோம்.

இதனால் விரிவான கலந்துரையாடல்கள் மூலம் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டும் என அவர்மேலும் தெரிவித்தார்.(ஜ-4)

# உழுந்து தட்டுப்பாட்டை நீக்க உடனடி நடவடிக்கை எடுங்கள்



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள உழுந்து தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்த அவசர உத்தரவை பிறப்பித்தார். உழுந்துக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால், அதன் விலை பல மடங்காக அதிகரித்துள்ளது. இதனால், சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்து யாழ்ப்பாணவர்த்தக சங்கம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்த நிலையில் பிரதமர் குறித்த உத்தரவை பிறப்பித்தார்.

யாழ்ப்பாண வர்த்தக சங்கம் பிரத மருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் தமிழ் மக்களின் உணவில் உழுந்து முக்கியமானதாக இருப்பதாகவும் முன்னர் 30 ரூபாவுக்கு விற்பனையான உழுந்து வடை இப்போது 60 ரூபாவுக்கு மேலாக விற்பனையாவதாகவும் சுட்டிக் காட்டிப்பட்டிருந்தது.

குறித்த கோரிக்கைக் கடிதத்தை ஏற்றுக்கொண்ட பிரதமர் உடனடியாகவே ஜனாதிபதியின் செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு உழுந்துக்கான தடையை நீக்க வேண்டும். அல்லது உழுந்து வர்த்தக நிலையங்களுக்குக் கிடைப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என உத்தரவிட்டார். (ஜ-2)

# 13 ஆவது திருத்தம் பலவந்தமாக திணிக்கப்பட்டது

# வடக்கிற்கு சிங்களவர்கள் செல்லமுடியாத நிலை ஏற்பட்டால்

# தெற்கில் உள்ள தமிழர்களின் நிலை என்னாகும்

## இனவாதம் பேசும் சரத் வீரசேகர

(கொழும்பு)

**13 ஆவது திருத்தச் சட்டத்தை இந்தியா எமக்கு பலவந்தமாக திணித்தது. இலங்கை போன்ற சுயாதீன நாட்டுக்கு எவ்வாறு இந்தியா அழுத்தம் கொடுக்க முடியும் எனக் கேள்வி எழுப்பியுள்ளார் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர.**



கொழும்பிலுள்ள ஊடகமொன்றுக்கு நேற்று அளித்த நீண்ட செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். 13 குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தமே எங்களுடைய நாட்டை ஒன்பது மாகாணங்களாக பிரிப்பதற்கு காரணமாக இருக்கின்றது.

சிறிய நாட்டை பிரிப்பதற்கு அவசியமில்லை. அதனை மீறியும் பிரிக்கப்பட்டுள்ளதென்றால் அது இந்த நாட்டை சமஷ்டி ஆட்சிக்கு கொண்டு செல்வதற்கான முயற்சி. அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்கு இந்த சமஷ்டி பொருத்தமானது.

வட, கிழக்கை தனி இராச்சியமாக பிரித்தால் அது இந்தியாவின் பாதுகாப்புக்கே பாரிய அச்சுறுத்தலாக அமையும். இந்தியாவின் பாதுகாப்பானது இலங்கையில் தங்கியுள்ளதென இந்தியாவிலுள்ள சிரேஷ்ட வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணன் கூறியுள்ளார்.

ஆகவே, வட, கிழக்கு தனி இராச்சியமாக உருவெடுத்தால் தமிழ்நாடு பார்த்துக் கொண்டிருக்காது. தமிழ் நாடும் தனியாக்கப்படும்.

இலங்கை ஒற்றையாட்சியாக இருப்பது இந்தியாவிற்கும் நல்லது. வட, கிழக்கு ஒன்றிணைக்கப்பட்டால் இலங்கை சீர்குலையும். வடக்கிற்கு சிங்கள மக்கள் செல்ல முடியாது போனால் தெற்கிலுள்ள தமிழ் மக்களுக்கு என்னவாகும். அது இந்தியாவிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## அமெரிக்கத் தூதுவர் சபாநாயகர் சந்திப்பு




(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ், சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவை பாராளுமன்றத்திலுள்ள சபாநாயகரின் அலுவலகத்தில் நேற்றையதினம் சந்தித்தார். இச்சந்திப்பில் அமெரிக்காவின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஜெப்ரிசனின் மற்றும் அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் அதிகாரி ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஜ-4)

## 497 டெட்டனேட்டர் குச்சிகளுடன் ஒருவர் கைது

(திருமலை)

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கோவிலடி பிரதேசத்தில் நேற்றுக் காலை சந்தேகத் திற்கிடமான முறையில் நின்ற ஆட்டோவை சோதனை மேற்கொண்டதில் விற்பனைக்காக கொண்டு செல்லப்பட்ட 497 டெட்டனேட்டர் குச்சிகளை கைப்பற்றியதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.



குருநாகல் பிரதேசத்தில் இருந்து கிண்ணியா பிரதேசத்திற்கு சட்டவிரோதமாக மீனவர்களுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்பட்ட டெட்டனேட்டர் குச்சிகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.(ஜ-4)

## சந்தைப்படுத்தும் நிலையம் அமைக்க ஒருங்கிணைப்புக் குழு தீர்மானம்

(நெளுக்குளம்)

வவுனியா வடக்கில் விவசாய உற்பத்தி பொருட்களை சேகரிப்பதற்காக மத்திய நிலையம் ஒன்றை அமைப்பது தொடர்பாக பிரதேச ஒருங்கிணைப்பு குழுவில் ஆராயப்பட்டது.



வவுனியா வடக்கு பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் கு.திலீபன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது வவுனியா வடக்கில் உள்ள மரக்கறிகள் மற்றும் பழங்களைச் சந்தைப்படுத்த முடியாத நிலையில், வவுனியா நகரிற்கு எடுத்துச் சென்றே அவற்றை சந்தைப்படுத்தவேண்டிய நிலை காணப்படுவதுடன் அதற்கு ஏற்ற வாகன வசதிகள் இல்லை எனவும் இதனால் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே குறித்த பிரச்சினைக்கு மரக்கறி மற்றும் பழவகைகளை விவசாயிகளிடம் இருந்து சேகரிப்பதற்காக ஒரு மத்திய நிலையத்தையோ அல்லது சந்தை வாய்ப்பையோ இப்பகுதியில் ஏற்படுத்தித் தரும் பட்சத்தில் அவற்றை சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் வவுனியா வடக்கில் மரக்கறி மற்றும் பழங்களைச் சேகரிப்பதற்காக அல்லது அதனைச் சந்தைப்படுத்துவதற்காக மத்திய நிலையம் ஒன்றினை அமைப்பது தொடர்பாகவும் அதற்கான இடத்தைத் தெரிவுசெய்வது தொடர்பாகவும் ஒருங்கிணைப்புக் குழுவால் தீர்மானம் எடுக்கப்பட்டது. (5-4-299)

## புதிய சீருடைகள் அறிமுகம்



(கொழும்பு)

இராணுவத்தில் உள்ள சிறப்புப் படையணிகளான கொமாண்டோ மற்றும் விசேட படையணியைச் சேர்ந்த படைவீரர்களுக்கு டிஜிற்றல் மயமாக்கப்பட்ட புதிய சீருடைகள் அறிமுகமாக்கி வழங்கி வைக்கப்பட்டன. (ஜ-4)




# இணுவில் திருப்பதி
# அருள்மிகு ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஆலயமும் சனிபகவான் தனிப்பெரும் சந்நிதியும்

கே.கே.எஸ்.வீதி,இணுவில்

## பிரமோற்சவகால அலங்கார உற்சவமும்,

**19.09.2020 சனிக்கிழமை தொடக்கம் 28.09.2020 திங்கள் வரை.**

## புரட்டாதிச்சனி வார உற்சவமும்

ஈழத்திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தின் மத்தியில் கலையும், கல்வியும், இறைபக்தியும் பெருகி, விளை நிலங்களையும் கொண்ட இணுவில் என்னும் திருப்பதியில் மிக உயர்ந்த கருவறை விமானத்தையும் கொண்ட, இணுவில் திருப்பதி என்னும் ஊர்ப்பெயரை தாங்கி, தன்னிடம் வேண்டி வருபவர்க்கெல்லாம் காவல் தெய்வமாக வீற்றிருக்கின்றார் நாராயண மூர்த்தியாகிய திருவேங்கடேஸ்வரர்

இங்கு திருவேங்கடமுடையானின் நித்திய பக்தனான சனீஸ்வரர் தனது புண்ணிய தீர்த்தமாக நள புஸ்பகரணியையும் கொண்டு தனிச்சந்நிதி அமைத்திருப்பது இவ்வாலயத்தின் தனிச்சிறப்பாகும்.

இவ்வாலயத்தில் சனீஸ்வர பரிகாரம் செய்வது மிகவும் சிறப்பானதாகும். பரிகாரம் செய்ய விரும்பும் அடியவர்கள் ஆலயத்தில் உள்ள புனித தீர்த்தத்தில் நீராடி மாற்று உடையணிந்து எள் எண்ணெய் தீபம் ஏற்றியும், கறுப்பு வஸ்திரம் தரித்தும், துளசி புஸ்பத்தால், கருநீல புஸ்பத்தால் அர்ச்சனை செய்தும் மற்றும் அந்தணர்களுக்கு தானம் வழங்கியும் சனீஸ்வரர் பரிகார ஹோமத்தில் கலந்து கொள்தல் நன்மை பயக்கும்.

(4013)




### அலங்கார உற்சவம் 2020

கொடியேற்றதினம்- 19.09.2020 சனிக்கிழமை மாலை 6.00 மணி
நரசிம்மர் உற்சவம் மாவிளக்கு பூசை 20.09.2020 ஞாயிறு மாலை 6.00 மணி
தேர்த்தினம் 26.09.2020 சனி மாலை 6.00 மணி
தீர்த்ததினம் 27.09.2020 ஞாயிறு மாலை 6.00 மணி
திருக்கல்யாணம் 28.09.2020 திங்கள் மாலை 6.00 மணி
ஆஞ்சநேயர் மடை 04.10.2020 ஞாயிறு மாலை 4.00 மணி

**தினமும் மாலை 6.30 மணி முதல் இசைநிகழ்ச்சிகள் நடைபெறும்.**

**புரட்டாதி சனி வார உற்சவம் 2020**
1ம் சனி வாரம் 19.09.2020
2ம் சனி வாரம் 26.09.2020
3ம் சனி வாரம் 03.10.2020
4ம் சனி வாரம் 10.10.2020

**பிரதி சனிதோறும் சனீஸ்வரர் பரிகார ஹோமம் காலை 08 மணிமுதல் மாலை 05 மணி வரை நடைபெறும்.**

தர்மகர்த்தா
ச.கணேசலிங்கம்.

தொ.பே 077 725 2476
021 224 2300



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம் 4
கி.பா: 48 செவ் 1 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: NCT (Civil Engineering) Work Supervisor (Gov)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/7641

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 2
கி.பா: செவ் 5 இல் உயரம்: 5.5
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. சொந்தக் கடை
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/7642

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 2 செவ் 12 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: CIMA, BABF. Bank Executive Officer
எதிர்பார்ப்பு: அரச, தனியார் வங்கி உத்தியோகத்தர்
தொ.இ: B/7644

பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: சதயம்
கி.பா: 51 சூரி.செவ் 10 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. எழுதுவினைஞர்
எதிர்பார்ப்பு: தகுந்த பெண்
தொ.இ: B/9170

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: மூலம் 3
கி.பா: 5 செவ் 5 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி விரிவாக்கல் உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: தகுந்த அரச, தனியார் உத்தியோகத்தர்
தொ.இ: G/9238

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: செவ் 1 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: பல்கலைக்கழக மாணவி
எதிர்பார்ப்பு: வெளிநாட்டு மணமகன்
தொ.இ: G/9240

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: மகம் 2 கி.பா: செவ் 3 இல்
உயரம்: 158 cm
தகைமை/தொழில்: Diploma in ICT,
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/9251

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 3
கி.பா: சூரி.செவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: பட்டதாரி நிரந்தர அரச உத்தியோகம்
எதிர்பார்ப்பு: பட்டதாரி வெளிநாட்டவர் மட்டும்
தொ.இ: G/9266

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்காக சுவசெரிய அம்புலன்ஸ்கள் சேவையில்

(கொழும்பு)
மனநலம் பாதிக்கப்பட்ட நோயாளர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்காக சுவசெரிய அம்புலன்ஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தத்திட்டத்தின் முதல் கட்டம் கொழும்பு மாவட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட உள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் சுனில் த அல்விஸ் தெரிவித்தார்.

இதற்கமைய, இந்த விடயம் தொடர்பில் சுவசெரிய அம்புலன்ஸ்சேவையில் ஈடுபடுபவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். போக்குவரத்து பிரச்சினை காரணமாக மனநலம் பாதிக்கப்பட்டவர்களை வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதில் தாமதம் ஏற்படுவதன் காரணமாக அவர்களின் நிலைமை மிகவும் மோசமடைவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், 1920 எனும் துரித அழைப்பு இலக்கத்தைக் கொண்ட அம்புலன்ஸ் சேவையின் ஊடாக மனநலம் பாதிக்கப்பட்டவர்களை அடுத்த மாதத்தில் இருந்து கொண்டு செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-4)

# 20 ஆவது திருத்தம் தொடர்பில் வெளியான புதிய தகவல்

(கொழும்பு)
அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆணைப் பத்திரத்தில் சேர்க்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அது தொடர்பான சகல நடவடிக்கைகளும் மேற்கொள் எப்பட்டு வருவதாக பாராளுமன்ற துணைப் பொதுச் செயலாளர் நீல் இத்த வெலநேற்றுத் தெரிவித்துள்ளார்.

எனவே குறித்த வரைபுக்கு எதிராக நீதிமன்றத் திற்குச் செல்வதானால், அதற்காக 7 நாட்கள் அவகாசம் வழங்கப்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நீதிமன்றத்திற்குச்சென்று மனுத் தாக்கல் செய்தால், நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவுபெறுவதற்குமூன்று வாரங்கள் எடுக்கும் என்றும் இந்த மனுவை இரண்டாவது வாசிப்பு விவாதத்திற்கு பாராளுமன்றத்தில் தாக் கல் செய்யலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

வரைவில் ஏதேனும் திருத்தங்கள் இருந்தால், அவற்றைக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும் போது சேர்க்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)


## வேலைக்கு ஆள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. தோட்டம் சம்பந்தமாக சகல வேலைகளும் செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். குடும்பமாக தங்க வசதி உண்டு. தோட்டத்தில் தனியாக வேலை செய்து பழக்கப்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
ஆரம்பச் சம்பளம்:- 30,000.00
T.P:- +94 77 168 1697, +94 77 113 3667
(C-253)

# இந்திய இழுவைப் படகு மோதியதில் கடலில் மூழ்கிய மீனவர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கு கடற் பகுதியில் இந்திய இழுவை படகு மோதியதில் 3 மீனவர்கள் நீரில் மூழ்கிய நிலையில் வேறு ஒரு படகில் சென்ற மீனவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

வடமராட்சி கடற் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களின் படகு வடமராட்சி மீனவர்களின் படகு மீது மோதியதில் கடலில் மூழ் கிய மீனவர்கள் மயிரிழையில் காப்பாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-8)

# வீடு உடைத்து திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியங்காடு புதிய செம்மணி வீதி வீடு ஒன்றில் கோம் தியேட்டர் சிஸ்டம் திருட்டுப் போயுள்ளதாக வீட்டு உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, கோப்பாய் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கல்வியங்காடு புதிய செம்மணி வீதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளர் வீட்டில் இல்லாத சமயத்தில் வீட்டிலிருந்த பெறுமதிமிக்க கோம் தியேட்டர் சிஸ்டம் மற்றும் சிடி பிளேயர் போன்றவற்றை திருடிச்சென்றுள்ளார்கள்.

கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(5-4)

# பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான ஒரு தொகுதி மணல் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நீதிமன்ற வளாகத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலத்தில் மணல் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஏலத்தில் மணல் கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவும், அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக் கொள்ளும் மணலை அன்றைய தினம் உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும் என யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

# வடக்கில் நியமனம் கிடைக்காத 605 பட்டதாரிகள் மேன் முறையீடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பட்டதாரிகள் நியமனத்தின் போது நியமனம் கிடைக்காத 605 பேர் மேன் முறையீடு செய்துள்ளனர் என்று மாவட்ட செயலாளர்கள் அறிக்கையிட்டுள்ளனர். அண்மையில் நாடு பூராகவும் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்தில் வடக்கு மாகாணத்தில் 3 ஆயிரத்து 902 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது.

இவ்வாறு வழங்கப்பட்ட நியமனதாரர்களில் 261 பேர் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டதாரி நியமனத்தின்போது நியமனம் கிடைக்காத பட்டதாரிகள் மேன் முறையீடு செய்வதற்குக் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

அதற்கமைய யாழ்.மாவட்டத்திலிருந்து 320 பட்டதாரிகளும் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 56 பேரும் வவுனியா மாவட்டத்திலிருந்து 122 பட்டதாரிகளும் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 57 பட்டதாரிகளும் மன்னார் மாவட்டத்திலிருந்து 70 பட்டதாரிகளும் மேன் முறையீடு செய்துள்ளனர் என்று மாவட்ட செயலாளர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

இதனடிப்படையில் வடக்கு மாகாணத்திலிருந்து மொத்தமாக 605 பட்டதாரிகள் மேன் முறையீடு செய்துள்ளனர். (5-8)



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகாலத் தலைவர்களில் ஒருவரும், கோப்பாய்த் தொகுதியின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் கு.வன்னியசிங்கத்தின் (கோப்பாய் கோமான்) 61 ஆவது ஆண்டு நினைவேந்தல் நீர்வேலியிலுள்ள அவரது உருவச் சிலையடியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோப்பாய்த் தொகுதிக் கிளைத் தலைவர் அ.பரம்சோதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளும்ன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-குப்பிழான் செய்தியாளர்)

# பண்டாரவன்னியன் சிலை விவகாரம்; நகர சபை விரைவில் தீர்மானம் எடுக்கும்

(நெளுக்குளம்)

வவுனியா பண்டாரவன்னியன் சிலைக்கு படிக்கட்டுகள் அமைத்த விவகாரம் தொடர்பாக குழு ஒன்றினை அமைத்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக வவுனியா நகர சபை அமர்வில் தீர்மானிக்கப்பட்டது.


வவுனியா மாவட்ட செயலகத்தின் முன்பாக அமைந்துள்ள பண்டாரவன்னியன் சிலைக்கு படிக்கட்டுகள் அமைக்கும் பணி நகரசபையால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அமைக்கப்பட்ட படிக்கட்டுகள் கம்பீரமாக காணப்பட்ட பண்டாரவன்னி யன் சிலையை உரு மறைப்பு செய்யும் வகையிலும் சிலை யின் தனித்துவத்தினை அழி க்கும் வகையிலும் அமைக்கப் பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்களால்விசனம் வெளியிடப்பட்டு வந்தது.

இதற்கமைய குறித்த விடயம் தொடர்பாக கடந்த புதன் கிழமை நடைபெற்ற வவுனியா நகர சபையின் மாதாந்த அமர்வில் ஆராயப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் குழு ஒன்று அமைப்பது பற்றி தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த உறுப்பினர் நா.சேனாதிராஜா குறித்த சிலைக்கு படி அமைத்த முறை தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. எனவே நகர சபை இதற்கு தீர்க்கமான முடிவொன்றை எடுக்க வேண்டும் எனவும், பொது அமைப்பு ஒன்று தமது செலவில் அதற்கான புதிய படிக்கட்டினை அமைத்து தருவதாகவும் அதற்கு நகர சபையின் நிர்வாகத்தின் சம்மத த்தை எதிர்பார்த்து இருப்ப தாகவும் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் நகர சபை உறுப்பினர்களான நா.சேனாதிராசா, க.சந்திர குலசிங்கம், ரி.கே.ராஜலிங்கம் ஆகியோரை உள்ளடக்கிய வகையில் குழு ஒன்றினை அமைத்து பண்டாரவன்னியன் மறுமலர்ச்சி மன்றத்தினையும் இணைத்து ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டு அதற்கான தீர்க்கமான முடிவினை எடுக்க முடியும் என நகர சபை தவிசாளர் தெரிவித்ததுடன், அது தீர்மானமாகவும் குறித்த அமர்வில் நிறைவேற்றப்பட்டது. (5-4-299)

# பொதுமக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளில் முறைப்பாட்டுப் பெட்டிகள்



(நெளுக்குளம்)

பொதுமக்கள் முறைப்பாடு மற்றும் ஆலோசனைப் பெட்டிகள் நேற்று பிற்பகல் இறம்பைக்குளம் ஈஷி மிஷன் ஆலயத்தின் அனுசரணையில் வன்னி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்தவிடம் கையளிக்கப்பட்டுள்ளன .

வன்னிப் பிராந்தியத்தில் பொதுமக்கள் அதிகளவில் நடமாடும் பகுதிகளான பேருந்து நிலையம், பிரதேச செயலகம் மாவட்டச் செயலகம், பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்ற இடங்களில் பொதுமக்கள் ஆலோசனை மற்றும் முறைப்பாட்டு பெட்டிகள் பொருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பெட்டிகளில் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளையும் ஆலோசனைகளையும் பொலிஸ்மா அதிபருக்கு தமது பெயரைக் குறிப்பிட்டும் குறிப்பிடாமலும் தெரிவித்துக்கொள்ள முடியும். இவற்றை சேகரிப்பதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவார். இவற்றுக்கான நடவடிக்கைகளை வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேற்கொள்வார்.

சமுதாயப் பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இதன் ஆரம்ப நடவடிக்கையாக பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் குறித்த முறைப்பாட்டுப் பெட்டிகள் மன்னார் , வவுனியா பொறுப்பதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.(5-4-299)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

திருநெல்வேலியில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன் பாக அமைந்துள்ள யாழ்ப்பா ணம் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலை யத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 20 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாமில் ஆர்வமுள்ள அனைத்துக் குருதி கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.(5-4-18)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCIES

Applications are invited by me up to 12th October, 2020 from suitably qualified persons for the following posts.

## 01. UNIVERSITY MEDICAL OFFICER

The University is looking for a highly motivated individual who has the following qualifications.

**Qualifications:**

Medical Degree of a recognized University with at least 3 years' experience as Medical Practitioner. Training in counseling will be an added qualification.

**NOTE**: One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience. Granting of study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

**Salary Scale**: U-MO1(II) -Rs.55,350 -10 x 1,335; 1 x 1,630 - 70,330/- p.m.
**Selection** : By Structured Interview

## 02. AUDIT ASSISTANT, GRADE II

**Qualifications:**

1. Should have passed the G.C.E. (O/L) Examination in six (06) subjects at one sitting with credit passes in:-
   i. Sinhala Language/ Tamil Language
   ii. English Language/ English Literature
   iii. Mathematics

**AND**

2. Should have passed in all subject at G.C.E. (A/L) Examination (except the Common General Paper) at one sitting (Passing in 3 subjects under the old syllabus at one sitting would be sufficient for this purpose.)

**AND**

3. Post Specific qualifications:
   a. Preliminary Level/ Licentiate I/ Foundation Level/ CAB I/ Executive Level of Institute of Chartered Accountants in Sri Lanka or equivalent.
   or
   b. Foundation Level of Chartered Institute of Management Accountants (CIMA)
   or
   c. Higher National Diploma in Accountancy (HNDA) of Sri Lanka Institute of Advanced Technological Education (SLIATE).
   or
   d. Membership of Association of Accounting Technicians (AAT) of Association of Accounting Technicians of Sri Lanka.

**AND**

4. Minimum of two (02) year experience in Auditing in State or Recognized Private Organization.

Preference will be given to those who posses an acceptable qualification in computer applications of not less than six (06) months duration obtained from a recognized institute.

**Salary Scale** : U-MN2 (II) -Rs.37,275–18x495-46,185 p.m.
**Selection** : By Interview
**Age** : Not less than 18 years and not more than 45 years

## 03. TECHNICAL OFFICER (ICT), GRADE - III

**Qualifications:**

(i) Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in one sitting in Science Subjects in the **Science Stream**; Subject com bination/s to be decided by the Faculty concerned upon the recom mendation of the Department.

**AND**

(ii) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Insti tution in the field of information Comm unication and Multimedia Technology/Information and Comm unication Technology/ Inform ation Technology or Equivalent.

* Preference will be given for who have work experience in ICT.

**Salary Scale** : U-MT1(IIIA) - Rs.31,625-7x300;10x355-37,275 p.m.
**Selection** : By Written and/or practical test and an interview
**Age** : Not less than 18 years and not more than 45 years

## 04. NURSING OFFICER, GRADE II

**Qualifications:**

(i)GCE (Ordinary Level) Examination in Six subjects at not more than two sitting with credit passes in three subjects.

**AND**

(ii)Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

**Salary Scale** : U-MT1(IIIA) - Rs.31,625-7x300;10x355-37,275 p.m.
**Selection** : By Interview
**Age** : Not less than 18 years and not more than 40 years.

## 05. PUBLIC HEALTH INSPECTOR, GRADE III

**Qualifications:**

Should have passed the Public Health Inspectors examination conducted by the Department of Health.

**Salary Scale:** U-MT1(IIIA) - Rs.31,625 – 7x300; 10x355 -37,275 p.m.
**Selection** : By Interview
**Age** : Not less than 18 years and not more than 45 years.

## 06. INSTRUMENT CARETAKER CUM REPAIRER, GRADE III

**(DANCING INSTRUMENTS)**

**Qualifications:**

i. Should have sat for the G.C.E (A/L) Examination
ii. Should have at least two (02) years' experience and ability in repairing and fixing Musical Instruments or Dancing Instruments or Arts & Sculpture Instruments in a Higher Educational Institute or reputed institute.
iii. Experience in maintenance of issue registers and storage of instruments.

- Should be a citizen of Sri Lanka
- Should be of good character sound physical health.

**Salary Scale** : U-MN1 (IIIA) - Rs.30,725-17x300-35,825p.m.
**Selection** : By Practical test and interview
**Age** : Not less than 18 years and not more than 45 years

## 07. CARPENTER, GRADE II

**Qualifications:**

i. Pass in the 8th standard.
ii. Should be conversant with the
   a. Various types of joints and preparation of such joints for work in carpentry used in building and furniture trade;
   b. Use of various types of tools, various species of wood and reading of drawings;
   c. Reading of scales up to 1/32" accurately.
iii. Not less than 2 years' experience in carpentry.

**Salary Scale:** U-PL 3(III) -Rs.29,915-16x270-34,235 p.m.
**Selection** : By Trade Test and Interview
**Age** : Not less than 18 years and not more than 40 years.

**Note:** ***Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

## STATUTORY BENEFITS

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment Trust Fund.
5. Free Medical Care.

Applications should be on specified forms issued by the University. Application form and particulars for the above posts can be downloaded only from the University website **www.jfn.ac.lk** Applicants should deposit Rs.100 (for each post) at any branch of the People's Bank in favour of **"University of Jaffna" Account No**. **"162-1-001-6-0000880"**. Applications must accompany a bank deposit slip and copies of relevant documents.

The envelope containing the duly filled application form must bear Title of the Post on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of **the Deputy Registrar/Non-Academic Establishments** of this University on or before **12.10.2020.**

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Insti tutions. Advance copies of applications may be sent in the first insta nce. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR**

# அரச மதுபானங்களுடன் இருவர் கைது

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் டி.எம். சதுரங்க மற்றும் அவரது தலைமையின் கீழ் இயங்கி வரும் விசேட குழுவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் அரச மதுபானம் விற்பனை செய்த குற்றத்தில் இருவர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து பெருமளவான மதுபான போத்தல்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக அக்கராயன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (5-4-312-316)

# காலபோக நெற்செய்கை கூட்டத்தீர்மானங்கள் சட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும்

(அக்கராயன்)

முல்லைத்தீவு வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவிலான ஆறு குளங்களுக்கான காலபோக நெற்செய்கைக் கூட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

அம்பலப்பெருமாள்குளம், தென்னியங்குளம், கோட்டைகட்டியகுளம், ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி, மருதங்குளம் ஆகிய குளங்களுக்கான கூட்டங்கள் துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.லதுமீரா தலைமையில் நடைபெற்றன.

இக்கூட்டங்களில் கருத்துத் தெரிவித்த பிரதேச செயலாளர் ஏற்கனவே சிறுகுளங்களுக்கான கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

நீர்ப்பாசனக் குளங்களுக்கான கூட்டங்கள் நடைபெறுகின்றன. விவசாயிகள் கூட்டத் தீர்மானங்களை மதித்து பயிர்ச் செய்கையில் ஈடுபட வேண்டும். இக்கூட்டத்தீர்மானங்கள் அனைத்தும் சட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

விவசாயிகள் எல்லோருக்கும் ஒரே சட்டமே நடைமுறையில் உள்ளது. எனவே விவசாயிகள் சட்டங்களை மதித்து ஒற்றுமையுடன் பயிர்ச் செய்கையில் ஈடுபடுமாறும் தெரிவித்தார்.

இக்கூட்டங்களில் வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் க.பிரகாஷ் உட்பட ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். விவசாயிகளினால் பயிர்ச் செய்கையில் எதிர்நோக்கப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்குமாறும் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர். (5-4-350)

# கணனிமயப்படுத்தப்பட்ட குடும்ப பங்கீட்டு அட்டை





(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலகத்தில் இலங்கையில் முதல் தடவையாக மக்களுக்கான குடும்ப பங்கீட்டையினை கணனிமயப்படுத்தப்பட்ட குடும்ப அட்டையாக நேற்று உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இராணுவத்தளபதி மற்றும் பொலிஸ் அத்தியட்சகர், கிளிநொச்சி மாவட்ட அரச அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (5-4-316)

# பாண்டியன் குளம் பொதுச்சந்தை 6 வருடங்களாக பயன்பாடற்ற நிலையில்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட பாண்டியன்குளம் பொதுச் சந்தை நீண்டகாலமாக மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றமை தொடர்பில் பல்வேறு தரப்பினரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பாண்டியன் குளம் பொதுச் சந்தை கடந்த 6 ஆண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டு காணப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின்னர் பெருந்தொகையான நிதியில் குறித்த சந்தையின் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட போதும் செயலிழந்த நிலையிலேயே காணப்படுகிறது. இதனால் இந்த சந்தையிலே வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த சில வியாபாரிகள் முழுமையாக தமது தொழிலை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-315)

# நெல் அறுவடையின் பின்னர் வயலுக்கு தீ மூட்டியவர்களுக்கு மானிய உரம் இல்லை

(அக்கராயன்)

வயல்களுக்கு தீ மூட்டியவர்களுக்கு மானிய உரம் இல்லை என துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.பிரியதர்சினி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனிக்குளத்தின் கீழான ஆறு குளங்களுக்கான காலபோக நெற்செய்கைக் கூட்டத்தில் கலந்து கொண்டு இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த இரு ஆண்டுகளாக அறுவடையின் பின்னர் நிலப் பண்படுத்தலின் போது வயல் நிலங்களுக்கு தீ மூட்ட வேண்டாம் என தெரிவித்திருந்தோம்.

எமது அறிவித்தல்களையும் மீறி வயல் நிலங்களில் தீ மூட்டியவர்களுக்கு மானிய உரம் இல்லை எனத் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த விவசாயிகள், சிறுபோகம் முடிந்தவுடன் காலபோக நெற் செய்கைக்கு நிலத்தினை தயார்படுத்துவதற்காகவே வயலுக்குத் தீ மூட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது எனத் தெரிவித்தனர்.

வயலுக்குத் தீ மூட்டியவர்கள் இயற்கை உரங்களை வயலுக்குள் பரவிவிட்டு பசளையைப் பெற்றுக் கொள்ளுங்கள். வயலுக்குள் தீ மூட்டாமல் வயலில் காணப்படுகின்ற புற்கள், வைக்கோலை பசளையாக மாற்றுங்கள் எனவும் தெரிவித்ததுடன் தீ மூட்டியவர்களுக்கு பசளை இல்லை எனவும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார். (5-4-350)

# யானை தடுப்பு வேலி அமைக்க கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு தென்னியங்குளம் கிராமத்தில் யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்துவதற்கு யானை வேலி அமைக்குமாறு தென்னியங்குளம் விவசாயிகள் துணுக்காய் பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலபோக நெற்செய்கைக் கூட்டத்தினை நடத்துவதற்கு கோட்டைகட்டியகுளம் கிராமத்திற்கு வருகை தந்த துணுக்காய் பிரதேச செயலாளரிடமே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கிராமத்திற்குள் வரும் யானைகள் பயிர்களை அழித்து வருவதாகவும் இரவுவேளைகளில் அச்சத்துடன் விழித்திருப்பதாகவும் குறிப்பாக கூட்டமாக வரும் யானைகள் தென்னியங்குளத்தின் அணைக் கட்டுகள், வாய்க்கால்களினைச் சேதப்படுத்தி வருவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

அத்துடன் நீண்டகாலமாக தென்னியங்குளம் கிராமத்தில் யானை வேலிகள் அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும் இதுவரை யானை வேலிகள் அமைக்கப்படவில்லை எனவும் விவசாயிகள் தெரிவித்தனர். (5-4-350)


## பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் திருமதி கே.சிவகரன் அறிவித்துள்ளார். (5-4)





வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் திருவள்ளுவர் விழாவும் பவனியும் நடைபெற்றது. மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலக அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:- மன்னார் செய்தியாளர்)

# இராசிபலன்

19.09.2020
புரட்டாதி 03, சனிக்கிழமை
துதியை பிற்பகல் 12.44 மணிவரை
அத்தம் முற்பகல் 7.54 மணிவரை
சுபநேரம் 3.03-4.33 மணிவரை
இராகுகாலம் 9.03-10.33 மணிவரை
சந்திராஷ்டமம்-உத்திரட்டாதி

வளவன்


மேஷம்
ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நல்லவர்களின் அறிவுரையும், ஆதரவும் கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செய் தொழில் மேன்மையுண்டு.


ரிஷபம்
பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.


மிதுனம்
தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.


கடகம்
வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு.


சிம்மம்
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பேச்சில் இனிமை தென்படும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


கன்னி
குடும்பத்தினருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.


துலாம்
மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைச்சல்கள் ஏற்படலாம்.


விருச்சிகம்
வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.


தனுசு
வாழ்க்கை தரம் உயர வழிவகை செய்து கொள்வீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.


மகரம்
ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.


கும்பம்
குடும்பத்தினரிடையே கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.


மீனம்
சொந்த பந்தங்களின் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

தர்மம் செய்வதை ஓர் அழகான பொழுது போக்காக்கிக் கொள்.

# அரச நிறுவனங்களின் மோசடிகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை



(கொழும்பு)

**அரச நிறுவனங்களில் மோசடியில் ஈடுபட்ட அனைத்து தரப்பினருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரச நிறுவனங்களில் மோசடியில் ஈடுபட்ட அனைத்து தரப்பினருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் எதிர்கால சந்ததியினரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் மோசடியில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை அமுல்படுத்தப்படும்.

காணி அபகரிப்பு விடயம் தொடர்பில் விசாரணை முன்னெடுப்பதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் விசேட பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். (ஐ-4)

# சர்வதேசப் புத்தகக் கண்காட்சி நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

சர்வதேச புத்தகக் கண்காட்சியில் பங்கேற்பவர்கள் சுகாதார வழிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவின் தலைமைத் தொற்றுநோய்த் தடுப்பு வைத்தியர் சுதத் சமரவீர இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்கான கொழும்பு சர்வதேச புத்தகக் கண் காட்சியானது நேற்று முதல் ஆரம்




பமாகி 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை நூல் வெளியீட்டாளர்களின் சங்கத்தினால் 22 ஆவது முறையாகவும் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த புத்தகக் கண்காட்சியானது கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியில் பங்கேற்பவர்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவதும் அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# பாடசாலைக்குள் நுழைந்த மலைப்பாம்பு மீட்பு



(பதுளை)

பதுளை, லுனுகல பிரதேசத்தில் ஜனதாபுர மகா வித்தியாலயத்திற்குள் நுழைந்த மிகப்பெரிய மலைப் பாம்பு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முன் தினம் இடம் பெற்றது.

குறித்த பாம்பினை வன விலங்கு திணைக்களத்திற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த பாம்பு 10 அடி நீளமும் 25 கிலோ கிராம் நிறையும் கொண்டது.

குறித்த மலைப்பாம்பு பிரதேசத்திலுள்ள நாய்கள், பூனைகள், கோழிகள் உட்பட விலங்குகளை உணவிற்கு எடுப்பதாக அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-4)

# மக்களுக்கு ஏற்ற வகையில் மஞ்சள் பயிரிடப்படும்



(கொழும்பு)

யால பகுதியில் பயிரிடப்பட்ட "அமுகஹா" என்ற மஞ்சளினை மக்கள் பாவனைக்கு ஏற்ற வகையில் தயாரிக்க தேவையான தொழில்நுட்ப அறிவு மாவட்ட அளவில் நுகர்வுக்கு ஏற்றது என ஏற்றுமதி வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

மார்ச் மாதம் முதல் ஜீலை மாதம் வரை 1500 ஹெக்ரேயர் அளவில் இந்த மஞ்சள் பயிரிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு



22

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

xv. சுற்றுலாத்துறை விடுதிகளை நிர்மாணித்தல்

xvi. மன்றத்திடமுள்ள இயந்திர உபகரணங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல்

xvii. நகர மண்டபத்தை இன்றைய நிலைக்கு பொருத்தமான விதத்தில் புதுப்பித்து தனியார் பிரிவினருக்கும் மற்றும் போட்டியான விதத்தில் வாடகை அடிப்படையில் வழங்குதல்.

xviii. கடற்கரையோரம் மற்றும் களப்புக்களை அண்டிய உள்ளூராட்சி மன்றங்கள் கரையோர பூங்காக்களை அமைத்து நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

### பிரதேச சபை நிதியம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் 129 (1) உறுப்புரையின் கீழ் பிரதேச சபை ஒவ்வொன்றும் அதன் பொதுவான நிதிசார் நோக்கங்களுக்கென பிரதேச சபை நிதியமொன்றைத் ஸ்தாபித்தல் வேண்டும்.. அத்துடன் அந் நிதியத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் வழிகளில் கிடைக்கப்பெறும் அனைத்து வருமானங்களும் வரவு வைக்கப்படல் வேண்டும்.

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் 129 (1) உறுப்புரையின் கீழ் பிரதேச சபை ஒவ்வொன்றும் அதன் பொதுவான நிதிசார் நோக்கங்களுக்கென பிரதேச சபை நிதியமொன்றைத் ஸ்தாபித்தல் வேண்டும்.**

(அ) கீழ் குறிப்பிடப்பட்ட எழுத்தினாலான சட்டங்களின் ஏற்பாடுகளை மீறுதல் தொடர்பில் உள்ளூர் அதிகாரச் சபையின் நீதிமன்றத்தாலோ அறவிடப்படும் அனைத்து குற்றப்பணங்களும் தண்டப்பணங்களும் மற்றும் வேறு பணத்தொகைகள் (முதலாம் அட்டவணையின் பிரகாரம்)

(i) துணை விதிகள்
(ii) தொல்லைகள் கட்டளைச்சட்டம்
(iii) மதுவரி கட்டளைச் சட்டம்
(iv) தெருக்கள் சேகரிப்புகள் (ஒழுங்கு விதிகள்) கட்டளைச் சட்டம்
(v) நஞ்சுகள், அபின், அபாயகரமான மருந்துகள் கட்டளைச் சட்டம்
(vi) 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச்சட்டம்
(vii) அடைவு பிடிப்போர் கட்டளைச் சட்டம்
(viii)பொது அரங்காட்டுக் கட்டளைச் சட்டம்
(ix) மிருகங்களுக்குக் கொடுமையிழைத்தல் தடுப்புக் கட்டளைச்சட்டம்
(x) உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டம்

(ஆ) பிரதேச சபைகள் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் வரிசைப் படுத்தப்பட்ட எல்லா முத்திரைத் தீர்வைத் தொகைகளும்.

(இ) அமைச்சரால் ஆக்கப்படும் ஏதேனும் சிறப்பு ஒதுக்கீட்டிற்கமைய, அமைச்சரால் பிரதேச சபைக்குக் குறித்தொதுக்கப்பட்ட பொதுவான அல்லது சிறப்பான எல்லா மானியக் கொடைகளும்

(ஈ) சபைக்கு கிடைக்கப்பெற்றதான வருவாயானது சபையினது உத்தேச செலவினத்துக்குச் சமமானதென்பதை உறுதிப்படுத்துவதற்காக அமைச்சரினால் பிரதேச சபைக்குக் குறித்தொதுக்கப்பட்ட எவையேனும் சிறப்பு மானியக் கொடைகள்.

(உ) இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் விதிக்கப்படும் எல்லா வீத வரிகளும், தீர்வைகளும், கட்டணங்களும் அத்துடன் வேறு இருப்புகளும்.

(ஊ) பிரதேச சபையின் விற்பனைகளால், குத்தகைகளால் அல்லது வேறு கொடுக்கல்-வாங்கல்களினால் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்.

(எ) பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்திலிருந்து அல்லது ஏதேனும் பகிரங்க சேவையை நிர்வகித்தமையிலிருந்து பிரதேச சபையினால் பெறப்பட்ட எல்லா வருவாயும்.

(ஏ) ஏதேனும் நீக்கம் செய்யப்பட்ட சட்டவாக்கத்தினைப் பின்பற்றி அல்லது பின்பற்றியதாகக் கருதி பிரதேச சபையானது எந்த உள்ளூர் அதிகாரசபையின் வழியாக வந்துள்ளதோ அந்த ஏதேனும் அதிகார சபைக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் வருவாய்மூலத்திலிருந்து பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்.

(ஐ) பாராளுமன்றத்தினால் தீர்மானத்தின் மூலம் அல்லது வேறு வகையாகப் பிரதேச சபைக்குக் காலத்துக்குக்காலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் அத்துடன் எல்லா வருவாய் மூலங்களும்.

(ஒ) பிரதேச சபை இச்சட்டத்தின் கீழ் அதனது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அதனால் கடனாகப் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்.

(ஓ) பிரதேச சபை அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிக்கும் போது அதற்கு வேறு வகையில் திரட்டப்படும் எல்லாப் பணத்தொகைகளும் வரவு வைக்கப்படல் வேண்டும்.

வேறு சட்டங்கள் மூலம் அறவிடக் கூடிய வருமானங்கள்

1. களியாட்ட வரி - களியாட்ட வரி கட்டளைச் சட்டம்

2. சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம் - மத்திய சுற்றாடல் அதிகார சபைச் சட்டம்.

3. விலங்கறு மனையொன்றில் கொல்லப்படும் விலங்குகளுக்காக அறவிடும் கட்டணம் -விலங்கறு கட்டளைச் சட்டம்.

4. பொது அரங்காட்டு இடங்களுக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்காக அறவிடப்படும் கட்டணம்- பொது அரங்காட்டு அதிகார சபைச் சட்டம்

5. காணிப் பங்கீடு திட்டங்களுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் - 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்.

6. கட்டட நிர்மாணிப்பிற்கான அனுமதிப்பத்திரங்களுக்காக அறவிடப்படும் கட்டணம் - 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்.

7. களியாட்ட விடுதிகளுக்கான அனுமதிப்பத்திரங்களுக்காக அறவிடப்படும் கட்டணம் - 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களியாட்ட விடுதிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் சட்டம்.

8. ஏல விற்பனையாளர்களுக்கும் தரகர்களுக்கும் விநியோகிக்கப்படும் அனுமதிப் பத்திரங்களுக்கான அறவீட்டுக் கட்டணம் - ஏல விற்பனையாளர்கள் மற்றும் தரகர்கள் தொடர்பான கட்டளைச் சட்டம்.

பிரதேச சபை நிதியத்தின் நிதிகள் அமைச்சரால் வர்த்தமானியில் அறிவிக்கப்படுகின்ற (அங்கீகாரம் பெற்ற) வங்கியில் வைப்பில் இடுதல் வேண்டும்.(ஏற்பாடு 125)

### பிரதேச சபை நிதியம் செலவு செய்யப்படும் முறை

- ஒரு பகுதியைத் திட்டவட்டமான பிணையங்களில் வைப்புச் செய்யலாம்.
- இச்சட்டத்தின் கீழோ வேறேதேனும் சட்டத்தின் கீழோ ஒப்படைக்கப்படுகின்ற ஏதேனும் கருமங்களை ஈடேற்றுதல்.
- தொழிலாளர் நட்டஈடு.
- ஆதன மற்றும் தொழிலாளர் காப்புறுதிக்காக.
- பிரதேச சபையின் நடவடிக்கைகளின் போது சேதமேற்படுகின்றவர்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணப்படிகள்.
- உரிய மீளச் செலுத்துதல்கள்.
- அறக்கொடைப் பணிகள் - திடீர் அனர்த்தங்களுக்கான செலவுகள்.
- தீயணைப்புப் படையொன்றைப் பேணிவரும் பொருட்டு.
- பொதுச் சேவைகள் மற்றும் பணிகளைப் பேணுவதற்கான செலவுகள்.
- ஊழியர் நலன்புரிச் செலவுகள்.
- சமய, கலாசார மற்றும் வைபவங்களுக்கானது.
- பொழுதுபோக்குச் செயற்பாடுகள், நூலகம், விளையாட்டு நடவடிக்கைகள்.
- கருமங்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படியும் செலவுகளும்.
- உள்ளூராட்சி நிறுவன சங்கங்களைப் பேணுதல்.
- கூட்டங்கள், கருத்தரங்குகள், பிரயாணச் செலவுகள்.
- பிரதேச சபை அலுவலர்களின் (தலைவர், செயலாளர்) செலவுகள்.
- இச்சட்டத்தின் மூலமாகவோ வேறு சட்டத்தின் மூலமாகவோ செலுத்த அதிகாரம் கிடைக்கும் செலவுகள்.

### நகர சபை நிதியம்

நகர சபை ஒவ்வொன்றும் அதன் பொதுவான நிதிசார் நோக்கங்களுக்கென நகர சபை நிதியமொன்றைத் ஸ்தாபித்தல் வேண்டும் (நகரசபை கட்டளைச் சட்டம்-158). அத்துடன் அந் நிதியத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் வழிகளில் கிடைக்கப்பெறும் அனைத்து வருமானங்களும் வரவு வைக்கப்படல் வேண்டும்.

- தண்டனைப் பணம்.
- முத்திரைப் பணம்.
- நகர சபைச் ச்ட்டம் மூலமாக விதிக்கப்படும் வரிகள், கட்டணங்கள், கொடுப்பனவுகள் போன்றவை.
- வர்த்தகம் மற்றும் கொடுக்கல் - வாங்கல்களிலிருந்து கிடைக்கும் பணம்.
- சபையின் ஆதனங்களிலிருந்தும் பொதுச் சேவைகளின் நிர்வாகத்தில் இருந்தும் கிடைக்கும் பணம்.
- பிற கையளிக்கப்பட்டுள்ள வருமான வழிகளிலிருந்து கிடைக்கும் பணம்.
- பாராளுமன்றத்தினால் ஒப்படைக்கப்படும் வருமான வழிகளிலிருந்து கிடைக்கும் பணம்.
- தனது அதிகாரங்களையும் கடமைகளையும் பாவிப்பதன் மூலமாகப் பெறப்படுகின்ற பணம்.

இவ்வாறு பெறப்படும் பணத்தை அருகாமையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் வைப்புச் செய்தல் வேண்டும்.

### நகர சபை நிதியம் செலவு செய்யப்படும் முறை (நிதியத்தின் செலவுகள்-159)

- சேவைகள் மற்றும் கடமைகளை ஈடேற்றுவதற்கான செலவுகள்.
- தொழிலாளர் நட்டஈடு செலுத்துதல்.
- தொழிலாளர் நட்டஈட்டுக் காப்புறுதி செலுத்துதல்.
- பணிக்கொடைக் கொடுப்பனவுகள்.
- மீளச் செலுத்துதல்.
- வறியோர் நிவாரணம், நிற்கதியுற்றோருக்கும் வலது குறைந்தோருக்குமான படிகள்.
- சமய மற்றும் கலாசார நடவடிக்கைகளுக்கான செலவுகள்.
- ஏதேனும் இடத்தைப் பராமரிப்பதற்கான ஊக்குவிப்புப் படிகள் (209 ஏ பிரகாரம்)
- பொது வைபவங்களுக்காக.
- உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ தொலைபேசி வசதிகள்.
- நூலகங்கள் போன்றவற்றுக்காக.
- கூட்டங்களுக்கான செலவுகள்.
- அலுவலர்களுக்கான இளைப்பாற்று மற்றும் பணிக்கொடைத் திட்டங்களை உருவாக்கல்(159ஏ).

### மாநகர சபை நிதியம்

மாநகர சபை ஒவ்வொன்றும் அதன் பொதுவான நிதிசார் நோக்கங்களுக்கென நகர சபை நிதியமொன்றைத் ஸ்தாபித்தல் வேண்டும் (மாநகரசபை கட்டளைச் சட்டம் 185-190). அத்துடன் அந் நிதியத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் வழிகளில் கிடைக்கப்பெறும் அனைத்து வருமானங்களும் வரவு வைக்கப்படல் வேண்டும்.

(தொடரும்...)

# வடக்கில் 409 குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க ஜனாதிபதி ஆலோசனை



(கொழும்பு)

**வடக்கு மாகாணத்தில் 22 நலன்புரி முகாம்களில் வாழ்கின்ற 409 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கினார்.**

கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப்பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் 22 நலன்புரி முகாம்களில் வாழ்கின்ற 409 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்து மீண்டும் உடனடியாக அவர்களை குடியேற்றுவதற்கு துரித நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். (ஜ-4)

## குணமடைந்தோர் 3060

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 17 பேர் குணமடைந்து நேற்று வீடுகளுக்குத் திரும்பியுள்ளதாக தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், வைரஸ் தொற்றிலிருந்து மீண்டோரின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 60 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், 44 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் உள்ளதுடன், வைரஸ் தொற்றினால் நாட்டில் இதுவரை 13 பேர் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## கிரிக்கெட்டா?, கொரோனாவா? நாமலே தீர்மானிக்க வேண்டும்

**மனோ டுவிட்**



(கொழும்பு)

கிரிக்கெட்டா, கொரோனாவா என நாமல் தீர்மானிக்க வேண்டும் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வலியுறுத்தினார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் இந்த விடயத்தை வலியுறுத்தினார்.

"நாட்டில் கொரோனா நோயாளர்களில் பெரும்பாலானோர் வெளிநாடு சென்று வந்தவர்களாவர்.

இந்நிலையில், இலங்கை வரவுள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, நமது சுகாதாரத் துறையின் 14 நாள் தனிமைப்படுத்தல் பரிந்துரையை ஏற்க மறுக்கிறார்கள்.

எனவே விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, கிரிக்கெட்டா, கொரோனாவா எனத் தீர்மானிக்க வேண்டும்" என அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

## கடற்றொழிலாளர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

மத்திய, வட கிழக்கு மற்றும் கிழக்கு வங்காள விரிகுடா பகுதியில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக கடற்றொழிலாளர்கள் பாதுகாப்பாக செயற்படுமாறு கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மத்திய வட கிழக்கு மற்றும் கிழக்கு வங்காள விரிகுடா பகுதியில் கடற்றொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம் என கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதியில் காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படுவதால் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் பாதுகாப்பான பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கையினை முன்னெடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஜ-4)

## பதவி விலகுகிறார் அகிலவிராஜ்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக ஒருவரை நியமிக்குமாறு கட்சியின் செயற்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அந்த கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். கட்சியின் அனைத்து பதவிகளிலும் மறுசீரமைப்பு செய்யவுள்ளதால் கட்சியின் பொதுச் செயலாளராக புதியவர் ஒருவரை நியமிக்குமாறு கோரியதாகவும் அவர் கூறியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின்114வது பிறந்த தின வைபவத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது அவர் இதனைத் தெரிவித்தார். (ஜ-4)


## ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று இலங்கை உதவித்தூதுவர் அலுவலகம் மூடல்

(ஜெத்தா)

சவுதி அரேபியாவின் ஜெத்தா நகரிலுள்ள இலங்கை உதவித் தூதர் அலுவலகத்தின் ஊழியர்கள் சிலர் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகியதன் காரணமாக அந்த அலுவலகம் 14 நாட்களுக்கு மூடப்பட்டுள்ளது.

நோய்த்தொற்றினால் பீடிக்கப்பட்ட அலுவலக ஊழியர் அங்கு கடந்த 25 வருடங்களாக வேலைசெய்து வரும் மொழி பெயர்ப்பாளர் என்று தெரிய வந்துள்ளது. (2-7)

## இலங்கை சிறுத்தை இங்கிலாந்தில் உயிரிழப்பு



(கொழும்பு)

இங்கிலாந்து மிருகக்காட்சிச்சாலையில் மூன்று குட்டிகளை ஈன்றெடுத்த இலங்கை சிறுத்தையொன்று உயிரிழந்துள்ளது.

2015 ஆம் ஆண்டு முதல் நோர்போக்கில் அமைந்துள்ள பான்ஹாம் மிருகக்காட்சிச்சாலையில் பராமரிக்கப்பட்டு வந்த சரிஸ்கா என்ற சிறுத்தை பல வாரங்களாக உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே சிறுத்தை கடந்த புதன்கிழமை உயிரிழந்துள்ளது.

சிறுத்தையின் பிரேத பரிசோதனையில் 13 வயதான சிறுத்தை ஒரு தீவிர இதயக் கோளாறினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளது என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ஜ-4)

## பயணச்சீட்டு மோசடி; இ.போ. சபைக்கு மாதாந்தம் 120 மில்லியன் ரூபா நட்டம்

(கொழும்பு)

நாட்டில் நடைபெற்று வரும் பயணச் சீட்டு மோசடி காரணமாக இலங்கை போக்குவரத்து சபைக்கு மாதமொன்றுக்கு 120 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பேருந்து நடத்துநர்கள் பயணிகளிடம் பயணச்சீட்டுக்கான பணத்தை வசூலித்து, பயணச்சீட்டுகளை வழங்க மறுப்பதன் விளைவாகவே இந்த நட்டஈடு ஏற்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

அதேநேரம் பயணிகள் பயணச்சீட்டுகளை பெற்றுக் கொள்வதை உறுதிசெய்யுமாறும் அவர் வலியுறுத்தினார்.

இவ்வாறான பேருந்து நடத்துநர்களை கண்டறிவதற்காக தொடர்ந்தும் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்த அவர், சோதனை நடவடிக்கையை மேலும் பலப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# பாரதம்

## கொரோனா உருவாக்கம் குறித்து டுவிட்; பெண் விஞ்ஞானியின் கணக்கு இடைநிறுத்தம்



(பீஜிங்)

கொரோனா வைரஸை சீனாவில் வுஹான் ஆய்வுகூடம் உருவாக்கியதாகக் கூறிய பெண் விஞ்ஞானியின் சமூக வலைத் தளங்களில் ஒன்றான டுவிட்டர் கணக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் தெரிய வருவதாவது,

சீனப் பெண் விஞ்ஞானியான லி-மெங் யான் சீன ஆய்வு கூடத்தில் தான் கொரோனா வைரஸ் உருவாக்கப்பட்டது. அதற்கான ஆதாரம் தன்னிடத்தில் இருக்கிறது என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் யானின் டுவிட்டர் கணக்கு அகற்றப்பட்டது. அவரது டுவிட்டர் கணக்கு பக்கத்தில், "கணக்கு இடைநிறுத்தப்பட்டது. டுவிட்டர் விதிகளை மீறும் கணக்குகளை டுவிட்டர் இடைநிறுத்துகிறது" என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

லீ மெங் யான் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஹொங் கொங்கில் பொதுச்சுகாதாரக் கல்வி மையத்தில் விஞ்ஞானியாக இருந்து வந்தார்.

சீனாவில்கொரோனா வைரஸ் பரவி வந்த நிலையில் அவர் திடீரென சீனாவில் இருந்து வெளியேறி அமெரிக்கா சென்று விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## கொரோனாவை வெல்ல உலக நாடுகள் ஒன்றிணைய வேண்டும்

### அழைப்பு விடுக்கும் ஐ.நா.பொதுச் செயலாளர்

(ஜெனீவா)

கொரோனாவை வெல்ல உலக நாடுகள் ஒன்றிணைய வேண்டும் என ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டேரஸ் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று உலகம் முழுவதும் தொடர்ந்து பரவி வரும் நிலையில், இது நம்பர் வன் உலகளாவிய பாதுகாப்பு அச்சுறுத்தலாக இருப்பதாக ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டேரஸ் கூறியுள்ளார்.


இது தொடர்பாக அவர் கூறுகையில், 'கொரோனாவை வெல்வதற்கு சர்வதேச சமூகம் ஒன்றிணைய வேண்டிய தருணம் இது. பலர் தங்கள் நம்பிக்கையை ஒரு தடுப்பூசி மீது வைத்திருக்கிறார்கள். ஆனால் தெளிவாக இருக்கட்டும், ஒரு தொற்றுநோய்க்கான சஞ்சீவி எங்கும் இல்லை. இந்த நெருக்கடியை ஒரு தடுப்பூசி மட்டும் போக்காது.

மேலும் புதிய தொற்றுகளை கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்புகளை நாடுகள் பெருமளவில் விரிவுபடுத்த வேண்டும். தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்கும் உயிர்களை காக்கவும் குறிப்பாக அடுத்த 12 மாதங்களுக்குள்ளாக முக்கிய சிகிச்சையை ஒன்றிணைந்து வழங்க வேண்டும். கொரோனா பெருந்தொற்று நமது வாழ்நாளில் கண்டிராத ஒரு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கிறது.

எனவே இந்த ஆண்டு ஐ.நா. பொதுச்சபை கூட்டம் வழக்கமான முறையில் இருக்காது எனவும் குட்டேரஸ் குறிப்பிட்டார். (2)

## தாய்வானுக்கு ஆயுத விற்பனை செய்ய அமெரிக்கா முடிவு

### சீனாவுடன் அதிகரிக்கும் பதற்றம்



(தாய்பே)

சீனாவுடன் பதற்றம் அதிகரிக்கும் சூழ்நிலையில் தாய்வானுக்கு மிகப்பெரிய அளவில் ஏவுகணைகள் உட்பட ஆயுதங்களை விற்பனை செய்ய அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தாய்வான் நாடு தனது நாட்டின் ஒரு பகுதி என சீனா தொடர்ந்து உரிமை கொண்டாடி வருகிறது. தாய்வான் ஜனாதிபதியாக ட்சாய் ல்ங் 2016 ஆம் ஆண்டு பதவியேற்ற பின்னர் இவ்விவகாரத்தில் சீனாவின் அழுத்தம் அதிகரித்துள்ளது.

தென் சீனக்கடல் பகுதியையும் முழுவதுமாக சீனா உரிமை கொண்டாடி அங்கு இராணுவ தளபாடங்களை குவித்து வருகிறது. இதற்கு, தாய்வான், பிலிப்பைன்ஸ், வியட்நாம் போன்ற நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இதற்கிடையில், தென்சீன கடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கத்தை தடுக்கும் வகையில் தாய்வான் நாட்டிற்கு அமெரிக்கா அதிக அளவில் இராணுவ ஆயுதங்களை வழங்கி வருகிறது.

மேலும், தாய்வானுக்கு பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கையிலும் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது. ஆனால், தாய்வானை தனது நாட்டின் பகுதியாகவே கருதும் சீனா தொடர்ந்து அந்நாட்டு வான்பரப்பில் அத்துமீறி போர் விமானங்களை பறக்க விட்டு வருகிறது. மேலும், தாய்வான் நாட்டின் கடல்பரப்பு எல்லை அருகே கடந்த சில நாட்களாக சீனா போர் பயிற்சி மேற்கொண்டு வருகிறது.

சீனாவின் இந்த அத்துமீறும் செயல்களுக்கு தாய்வான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும், சீனாவின் நடவடிக்கைகளுக்கு பதிலடியாக தங்கள் நாடும் போர்ப்பயிற்சியில் ஈடுபட உள்ளதாக தாய்வான் அதிரடியாக தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தென் சீன கடல்பகுதியில் சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் தாய்வான் நாட்டிற்கு மிகப் பெரிய அளவில் ஆயுத விற்பனை செய்ய அமெரிக்கா முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. 7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான இந்த ஆயுத விற்பனையில் ஏவுகணைகளும் உள்ளடக்கம் என தெரியவந்துள்ளது.

தாய்வான் - சீனா இடையேயான மோதலுக்கு மத்தியில் அமெரிக்காவின் மூத்த அதிகாரி தாய்வான் வந்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (2)

## கொரோனா வைர
## 5 கோடி குழந்தைக

(ஜெனிவா)

**கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொ முதல் உலகளவில் மேலும் 15 கோடி குழந்தை தள்ளப்பட்டுள்ளதாக ஆய்வில் தெரியவந்து**

ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நல அமைப்பான யுனிசெப்பும் 'குழந்தைகளை பாதுகாப்போம்' என்ற தொண்டு நிறுவனமும் இணைந்து மேற்கொண்ட ஆய்வின்மூலம் தெரிய வந்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குப் பிந்தைய குழந்தைகள் நிலை குறித்து 70 இற்கும் மேற்பட்ட நாடுகளில் ஆய்வு நடத்தப்பட்டன.

உலகளவில் கல்வி, வீடு, ஊட்டச்சத்து, சுகாதாரம் அல்லது தண்ணீர் போன்ற அத்தியாவசிய தேவைகள் கிடைக்காமல் மேலும் 15 கோடி குழந்தைகள் வறுமையில் தள்ளப்பட்டு



**டுபாய் பட்டத்து இளவரசர் மேதகு ஷேக் ஹம்தான் பின் முகம்மது வழங்கும் காட்சிகள் சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது. டுபா ராஷித் அல் மக்தூம் பிராணிகள் மற்றும் மற்ற விலங்கினங்களிடம் பல்வேறு வனவிலங்குகள் மற்றும் செல்லப்பிராணிகளை வளர்த்து வ**

## ஈரான் மீது அமெரிக்கா

(வோஷிங்டன்)

"ஈரான் மீது மீண்டும் புதிய பொருளாதாரத் தடை விதிக்கப்படும்" என, அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக் போம்பியோ தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே தொடர்ச்சியாக மோதல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் போம்பியோ இவ்வாறு தெரிவித்துள்ளமை மோதல் போக்கை அதிகரித்துள்ளது.

ஈரானின் முக்கிய போர் தளபதியான காசிம் சுலைமானியை கடந்த ஜனவரி மாதம் அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல் நடத்திக் கொலை செய்தது.

அதைத் தொடர்ந்து ஈரான் இராணுவம், ஈராக்கில் இயங்கிவரும் அமெரிக்க இராணுவத் தளத்தில் தாக்குதல் நடத்தியது.

அந்தத் தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட அமெரிக்க வீரர்கள் பலத்த காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்

# வெளிநாடு

## ...ரஸ் தாக்கத்தின் எதிரொலி
## ...ந்தைகள் வறுமையின் பிடிக்குள்

**...தொற்று ஆரம்பித்தது**
**...ந்தைகள் வறுமைக்குள்**
**...ந்துள்ளது.**

இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இதன்மூலம் மேற்படி வசதிகள் இல்லாமல் வறுமையில் வாடும் குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் 120 கோடியாக உயர்ந்திருப்பதாக யுனிசெப் நிறுவனம் கவலை தெரிவித்துள்ளது.

இதில் 45 சதவீத குழந்தைகள் மேற்படி அத்தியாவசிய தேவைகளில் ஒன்றுகூட கிடைக்காமல் அவதிப்படுவதாகவும் யுனிசெப் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-2)



## தடுப்பூசி வாங்க போட்டி போடும் பணக்கார நாடுகள்



(மொஸ்கோ)

கொரோனாத் தடுப்பூசிகளை வாங்க பணக்கார நாடுகள் போட்டி போடுவதாவும் முன்னணி மருந்து நிறுவனங்களுடன் ஒப்பந்தம் போட்டு விட்டன எனவும் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

கொரோனா வைரஸ் பெருந்தொற்று நோய்க்கு கடிவாளம் போடுவதற்கு இங்கிலாந்து, அமெரிக்கா, சீனா, ரஷ்யா, இந்தியா, இஸ்ரேல் எனப் பல நாடுகளும் தடுப்பூசியை உருவாக்கி, அவற்றைப் பல்வேறு கட்டங்களாக மனிதர்களுக்கு செலுத்தி பார்த்து சோதித்து வருகின்றன. இன்னும் சந்தைக்கு எந்தவொரு தடுப்பூசியும் பகிரங்க விற்பனைக்கு வரவில்லை. (2)



...மது பின் ராஷித் அல் மக்தூம் ஒட்டகங்களுக்கு தன் கையால் உணவு
...டுபாய் பட்டத்து இளவரசர் மேதகு ஷேக் ஹம்தான் பின் முகம்மது பின்
...ளிடம் மிகுந்த பாசத்துடன் பழகும் பண்புடையவர். அவர் சொந்தமாக
...த்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

## 30 மில்லியன் மக்கள் பட்டினியால் இறக்கும் அபாயத்தில்
### எச்சரிக்கிறது ஐ.நா!

(ஜெனீவா)

உலகில் சுமார் 30 மில்லியன் மக்கள் பட்டினியால் இறக்கும் அபாயத்தில் உள்ளதாக ஐ.நா.உலக உணவு திட்டத்தின் நிர்வாக இயக்குநர் டேவிட் பீஸ்லி எச்சரித்துள்ளார்.

இவர்களைக்காப்பாற்ற உதவ முன்வருமாறு உலக செல்வந்தர்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் உதவிகள் கிடைக்காதவிடத்து 30 மில்லியன் மக்கள் பட்டினியால் பரிதாபமாக உயிரிழக்க நேரலாம் என அவர் குறிப்பிட்டார்.

உலகளவில் சுமார் 270 மில்லியன் மக்கள் பட்டினியின் விளிம்பை நோக்கிச் சென்றுள்ளனர்.

இந்த ஆண்டுக்குள் இந்த எண்ணிக்கை மேலும் 138 மில்லியனால் அதிகரிக்கலாம் என உலக உணவுத் திட்டம் நம்புவதாகவும் ஐ.நா.பாதுகாப்புப் பேரவையிடம் டேவிட் பீஸ்லி தெரிவித்துள்ளார்.

பட்டினியால் மரணத்தின் விளிம்பில் உள்ள சுமார் 30 மில்லியன் மக்களைக் காப்பாற்றும் வகையில் குறைந்தது ஒரு வருடத்துக்கு அவர்களுக்கு உணவளிக்க எங்களுக்கு 4.9 பில்லியன் டொலர்கள் தேவை.

உலகில் சுமார் 8 டிரில்லியன் டொலர் நிகர சொத்து மதிப்புள்ள 2,000 பில்லியனர்கள் உள்ளனர்.

தொற்றுநோய்களின் போது பல பில்லியன்களை இவர்கள் சம்பாதித்தனர்.

அவர்கள் பணம் சம்பாதிப்பதை நான் எதிர்க்கவில்லை, ஆனால் நம் வாழ்நாளில் எவரும் கண்டிராத மிகப்பெரிய நெருக்கடியை பல மில்லியன் மக்கள் எதிர்கொண்டுள்ள இந்த நேரத்தில் இத்தகையவர்கள் மனிதநேய அடிப்படையில் உதவ முன்வர வேண்டும் என முன்னாள் தென் கரோலினா ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிலையில் உலகம் மிகப்பெரும் நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இந்த வேளையில் அதிகளவு செல்வத்தைக் கொண்டுள்ளவர்கள் ஏதுமற்றவர்களுக்கு உதவ முன்வர வேண்டும் எனவும் ஐ.நா. உலக உணவு திட்டத்தின் நிர்வாக இயக்குநர் டேவிட் பீஸ்லி அழைப்பு விடுத்துள்ளார். (2)

## ...கா பொருளாதாரத் தடை
### வலுக்கும் மோதல்

தக்கது.

இந்தப் புதிய பொருளாதாரத் தடைகளை அடுத்த வாரம் ஐக்கிய நாடுகள் சபையில் அமுல்படுத்தும் என்றும் ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கு அமெரிக்கா தொடர்ந்து முயலும். மத்திய கிழக்குப் பகுதிகளில் அமைதியை ஏற்படுத்த அனைத்து முயற்சிகளையும் அமெரிக்கா செய்யும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-2)



## அல்லாவை அவதூறாகப் பேசியதற்காக சிறுவனுக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை

(நைஜர்)

நைஜீரியாவின் 13 வயது சிறுவனுக்கு அல்லாஹ்வை அவதூறாக பேசியதாக குற்றஞ்சாட்டி பத்து ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியாவின் வடக்கு கானோ மாநிலத்தில் உள்ள நீதிமன்றத்தால் உமர் ஃபாரூக் என்ற சிறுவனுக்கே கடந்த செவ்வாய்க்கிழமை இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நண்பன் ஒருவனுடனான வாக்குவாதத்தின் போது குறித்த சிறுவன் அல்லாஹ்வை தவறான வார்த்தைகளை பயன்படுத்தி பேசியதாக குற்றச்சாட்டப்பட்டுள்ளான்.

இதனையடுத்து ஓகஸ்ட் 10 ஆம் திகதி சிறுவன் குற்றவாளி என அறிவிக்கப்பட்டதையடுத்து, செப்டெம்பர் 7 ஆம் திகதி வரை தீர்ப்புக்கு எதிராக சட்டத்தரணிகள் மேல்முறையீடு செய்யாததையடுத்து கடந்த புதன்கிழமை தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும் இத் தீர்ப்பு நைஜீரிய அரசியலமைப்பிற்கு சர்வதேச சட்டத்திற்கும் விரோதமானது என்று யுனிசெப் மற்றும் சட்டத்தரணி எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

"தெய்வ நிந்தனை நைஜீரிய சட்டத்தால் அங்கீகரிக்கப்படவில்லை. இது நைஜீரியாவின் அரசியலமைப்பிற்கு முரணானது" எனவும் 2001 ஆம் ஆண்டில் நைஜீரியா ஒப்புதல் அளித்த குழந்தைகளின் உரிமைகள் மற்றும் நலனுக்கான ஆபிரிக்க சாசனம் உட்பட குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான அனைத்து சட்டங்களையும் இத் தீர்ப்பு மீறுவதாக சட்டத்தரணி கவலை வெளியிட்டுள்ளார். இதேவேளை, குறித்த நீதிமன்றத்தில் அண்மையில் நபிகள் நாயகத்திற்கு எதிராக அவதூறாகப் பேசியதற்காக ஒருவருக்கு மரண தண்டனையை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (2)


### குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் தொடர்பில்

## துரித நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி முயற்சி

## அரச மற்றும் தனியார் துறைகள் ஆமை வேகத்தில்

(கொழும்பு)

**குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் கனவை நனவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் அரச மற்றும் தனியார் துறைகளில் மெதுவான நடவடிக்கைகள் இருப்பது வருந்தத்தக்கது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**



வீடமைப்பு, கட்டுமான கட்டடப் பொருட்கள் மற்றும் கைத்தொழில் அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் கலந்துரையாடல் நடைபெற்றது.

அதில் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் பங்கேற்ற இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவிக்கையில், 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் மாவட்ட அளவில் 1500 வீட்டு வசதி அலகுகளை நிர்மாணித்து 70 ஆயிரத்து 100 குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் அரச மற்றும் தனியார் துறைகளின் பங்களிப்புடன் இந்தக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வீடுகளை வாங்க நீண்டகால கடன்களை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

## புதிய போக்குவரத்து நடைமுறையில் மாற்றம்



(கொழும்பு)

கொழும்பில் அமுல்படுத்தப்பட்டுள்ள புதிய ஒழுங்கை நடைமுறையில் ஆட்டோ, மோட்டார் சைக்கிள் சாரதிகளுக்கு இரண்டு ஒழுங்கைகள் வழங்க பொலிஸார் இணக்கம் தெரிவித்தனர்.

கொழும்பு நகருக்குள் நுழையும் பிரதான நான்கு வீதிகளில் புதிய போக்குவரத்து விதிகள் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில் அவை கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது. எனினும் பேருந்து, ஆட்டோ, மோட்டார் சைக்கிள் பயன்படுத்தும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

குறித்த விடயம் தொடர்பாக மொரட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் பொலிஸார் முன்னெடுத்த ஆய்வுகளைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீதி ஒழுங்கை சட்டம் பரீட்சார்த்த நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் முதல் குறித்த சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வீதி ஒழுங்கு முறைமைகளை மீறி செயற்படுவோருக்கு எதிராக 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7)

## பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாக 25 வனப்பகுதிகள் அறிவிப்பு

(அநுராதபுரம்)

பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக 25 வனப் பகுதிகளை வர்த்தமானியில் அறிவிப்பதற்கு வனப் பாதுகாப்புத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

அநுராதபுரம், மொனராகலை, காலி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் காணப்படும் வனப்பகுதிகள் இதில் பெயரிடப்பட்டுள்ளன.

73 ஏக்கர் நிலப்பரப்புக்கும் அதிகளவான பகுதி இவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வேரகொட தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் இரண்டு வார காலப்பகுதிக்குள் குறித்த வர்த்தமானி வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-7)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மாயை

ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் சொன்னார். ''இந்த உலகத்தை மாயை என்று மகான்கள் எல்லாம் சொல்கிறார்களே, அதை நான் நம்ப மாட்டேன் சேர்'' என்றார். என்னங்க இது...இப்படி திடீர் என்று சொல்கின்றீர்களே? என்றேன். ''என்ன சேர் பின்பு? இந்த உலகத்திலே எவ்வளவு காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன? எல்லாவற்றையும் நாம் கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அப்படி இருக்கின்ற பொழுது இதைப் போய் மாயை என்று சொன்னால் எப்படி?'' என்றார்.

மாயை என்றால் ஏதோ அடியோடு இல்லாத ஒன்று என்று அவர் நினைக்கின்றார். அதனாலே அவர் சொல்கின்றார்...மாயை என்பது அடியோடு இல்லாத ஒன்று இல்லை. இப்பொழுது முயல் கொம்பு, குதிரைக் கொம்பு என்று சொல்கின்றோம். அப்படி ஒரு பொருள் அடியோடு இல்லை. ஆனால்...மாயை என்பது அப்படி இல்லை. மாயை என்பது எப்படி என்றால்...

அது இருக்கின்றதாக நினைக்கின்ற வரைக்கும் இருக்கிறதாகத் தோன்றும். கானல் நீர் மாதிரி என்று வைத்துக் கொள்ளுங்கள். கானல் நீர் கண்ணுக்குத் தெரிகின்றது. அதாவது தூரத்திலே தண்ணீர் இருக்கின்ற மாதிரி தெரியும். ஆனால் உண்மையிலே அங்கே தண்ணீர் இல்லை. அங்கே தெரிகின்ற தண்ணியைக் குடித்து நாம் தாகசாந்தி செய்து கொள்ள முடியாது. கானல் நீர் என்பது உண்மையான தண்ணீர் இல்லை என்று தெரிந்தவர்களுக்குக்கூட கானல் நீர் தெரியத்தான் செய்கின்றது. அங்கே தண்ணீர் இல்லை என்பது நமக்கு நன்றாகத் தெரியும்... இருந்தாலும் கூட தண்ணீர் இருக்கின்றதாகவே தான் தோன்றும். அதுதான் மாயை. இந்த உலகை மாயம் என்று உணர்த்த ஞானிகளுக்குக் கூட இந்த லோகம் தெரியத்தான் செய்கின்றது.

ஒரு கயிறு கீழே கிடக்கின்றது சேர். இருட்டு நேரம். அதைப் பார்த்து பாம்பு என்று தவறாக நினைத்துக் கொள்கின்றோம். அப்பொழுது என்ன ஆகின்றது. நிஜமான பாம்பு உண்டாக்குகின்ற அத்தனை பயத்தையும் பதற்றத்தையும் அது எங்களிடம் உண்டாக்கி விடுகின்றது.

அதே மாதிரி...உலகம் உண்மையிலேயே நிரந்தர சத்தியமா இல்லை என்றால் கூட, அதை நாம் சத்தியம் என்று நினைக்கின்ற வரைக்கும் அது மாதிரியே எல்லாக்காரியமும் நடக்கின்றது.

நாம் கனவு காண்கின்றோம். கனவு காணுகின்ற வரைக்கும் அந்தக் கனவு நிஜமாகத்தான் இருக்கும். முழித்துக் கொண்டதன் பின்பு அது ''ஒன்றுமில்லை'' என்று ஆகிவிடும். நாம் அஞ்ஞானத்தில் தூங்கிக் கொண்டிருகின்ற வரைக்கும் உலகம் மெய்யாக இருக்கும். நாம் ஞான நிலையில் முழித்துக் கொண்டதற்கு பின்பு அது மறைந்தே போய்விடும்.

கிளிஞ்சல் வெயிலிலே பார்க்கின்ற பொழுது வெள்ளி மாதிரி மினுமினுக்கும். அதுபோல் பிரமத்தில், மாயையின் காரணமாக உலகம் தற்காலிகமாக மினுமினுக்கின்றது. அவ்வளவுதான்.

அதுசரி...ஞானிகளுக்கு இந்த உலகம் இனிப்பாகவும் எங்களுக்கு கசப்பாகவும் தெரிகின்றதே அது எப்படி?

சர்க்கரையை உபயோகப்படுத்தி பாகற்காய் மாதிரியே ஒரு பொம்மை செய்து வைத்திருக்கின்றோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதாவது சர்க்கரை பொம்மை பாகற்காய் மாதிரி இருக்கின்றது. விடயம் தெரியாத குழந்தை அதை பாகற்காய் என்று நினைத்துக் கொண்டு ஓடிப் போய்விடும். விடயம் தெரிந்தவனுக்கு அது சர்க்கரை என்பது தெரியும். அது மாதிரித்தான் ஞானிகளுக்கு இவ்வுலகம் இனிப்பு.. நமக்குக் கசப்பு.

இவ்வளவும் காமகோடி பீடாதிபதி பரமாச்சாரியார் சொல்கின்றார். அதனாலே இந்த உலகத்திலே நாம் எப்படி வாழ வேண்டும் என்று கேட்டால் தாமரை இலை தண்ணீர் போல் வாழ வேண்டும் என்கின்றார்கள் பெரியவர்கள். ஒட்டாமல் வாழ்கின்ற வாழ்வு அது. தாமரை இலை, தண்ணீரிலேயே தான் இருக்கும். இருந்தாலும் தண்ணீர் இதிலே ஒட்டாது. ஒரு துளி அது மேலே விழுந்தாலும் அது நிற்காது. ஓடி போய்விடும். "இந்தக் காலத்துப் பிள்ளைகள் அதற்குப் புது விளக்கம் கொடுக்கின்றார்கள். கொஞ்ச நாளைக்கு முன்னர் ஒரு சின்னப் பெண் என்னிடம் வந்து இன்று ஒரு தகவலிலே என்னென்னமோ சொல்கின்றீர்களே...தாமரை இலையிலே தண்ணீர் நிற்காது.. ஏன் தெரியுமா சேர்?'' என்று கேட்டது. நீயே சொல்லும்மா என்றேன். தாமரை இலையில் தண்ணீர் நிற்காது. ஏன் என்றால் அதற்குக் கால் கிடையாது என்றது உலகமே மாயம்.

# கொரோனாவின் பிடிக்குள் திணறும் இந்தியா

## ஒரே நாளில் ஒரு இலட்சத்தை அண்மித்த தொற்று



(டில்லி)

**கொரோனாவின் பிடிக்குள் சிக்கி திணறிவரும் இந்தியாவில் ஒரே நாளில் ஒரு இலட்சம் புதிய தொற்றாளர்கள் இனம்காணப்பட்டுள்ளனர்.**

நேற்று முன்தினம் மாத்திரம் புதிதாக 97 ஆயிரத்து 894 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதையடுத்து இந்தியாவில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களது மொத்த எண்ணிக்கை 51 இலட்சத்து 18 ஆயிரத்து 253 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை கடந்த 24 மணி நேரத்தில் கொரோனாத் தொற்று உறுதியான நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவர்களது எண்ணிக்கை ஆயிரத்து 132 ஆக உள்ளது.

இதையடுத்து இதுவரை கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்தவர்களது மொத்த எண்ணிக்கை 83 ஆயிரத்து 198 ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ-4)

# 20 ஐ ஒன்றரை மாத காலத்துக்குள் நிறைவேற்றுவோம்

## ரோஹித அபேகுணவர்தன திட்டவட்டம்



(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை எதிர்த்தரப்பினரின் ஆதரவின்றி ஒன்றரை மாத காலத்துக்குள் நிறைவேற்றுவோம். ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அதிகாரங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

ஜனாதிபதியுடன் அரசாங்கம் இணக்கமாகவே செயற்படும் என கப்பற்றுறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச நிர்வாகத்தை சிறந்த முறையில் முன்னெடுக்க முடியாது என்ற காரணத்திற்காகவே அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் இரத்துச் செய்யப்பட்டு 20 ஆவது திருத்தம் உருவாக்கத்திற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 20 ஆவது திருத்தத்தில் குறைபாடுகள் உள்ளது என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து 20 ஆவது திருத்த சட்டவரைபு மீள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்பு திருத்தம், நாட்டுக்கு பொருந்தும் வகையிலான அரசியலமைப்பு ஆகியவற்றை உருவாக்குவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கினோம். வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை மக்கள் புறக்கணித்தமையால் தான் கடந்த அரசாங்கத்தை முழுமையாக புறக்கணித்தார்கள். அரச நிர்வாகத்தை சிறந்த முறையில் முன்னெடுக்க வேண்டும் என்ற காரணத்தினால் அரசாங்கம் அரசியலமைப்பினை திருத்தம் செய்ய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

எதிர்த்தரப்பினரது ஆதரவு இல்லாமல் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் எம்மால் ஒன்றரை மாத காலத்துக்குள் நிறைவேற்ற முடியும். நடைமுறைக்கு பொருத்தமான விடயங்கள் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் அதிகாரங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. ஜனாதிபதியுடன் இணக்கமாக செயற்பட்டு அரச நிர்வாகத்தை முன்னெடுப்போம் எனத் தெரிவித்தார். (ஐ-4)

# மோட்டார் வாகன இறக்குமதி இடை நிறுத்தம்

## அமைச்சரவையில் தீர்மானம்

(கொழும்பு)

இறக்குமதியை முறையாக முன்னெடுப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்களை மூன்று வகைகளாக வகைப்படுத்துவதற்கு கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைவாக உள்ளூரில் உற்பத்தி செய்யக்கூடிய அல்லது தயாரிக்கக் கூடிய அத்தியாவசியம் அல்லாத பொருட்கள், வர்த்தகப் பொருட்கள், மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றின் இறக்குமதி தற்காலிகமாக இடை நிறுத்தப்படுத்தப்படுகின்றன.

இது தொடர்பாக அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பின்வருமாறு.

1969 ஆம் ஆண்டு இலக்கம் 1 இன் கீழான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்.

கொவிட்-19 வைரஸ் தொற்றின் காரணமாக வெளிநாட்டு நாணய மதிப்பின் மீது ஏற்பட்ட தாக்கத்தை குறைக்கும் நோக்குடன் இறக்குமதியை முறையாக முன்னெடுத்தல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை வழமை நிலைக்கு கொண்டு வருவது தொடர்பில் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரை 2020.04.01 திகதியன்று நடைபெற்ற கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்டது.

அதற்கமைவாக 'சௌபாக்கிய தொலைநோக்கு' என்ற கொள்கைக்கு ஏற்ப தேசிய பொருளாதாரத்தை வலுவூட்டுதல் மற்றும் மறுசீரமைப்புக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதியால் சுங்க வரிகளை தீர்மானிக்கும் குழு நியமிக்கப்பட்டது.

அத்தோடு அந்த குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக இடைக்கால நடவடிக்கை என்ற ரீதியில் இறக்குமதியை முறையாக முன்னெடுப்பதற்காக இறக்குமதிப் பொருட்கள் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அந்தவகையில்,

உள்ளூரில் உற்பத்தி செய்யக்கூடிய அல்லது தயாரிக்கக் கூடிய அத்தியாவசியமற்ற பொருட்கள், வர்த்தகப் பொருட்கள் மற்றும் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்தலை தற்காலிகமாக இடை நிறுத்துதல்.

வழங்குபவர்களினால் வழங்கப்படும் கடன் வசதியின் அடிப்படையில் அல்லது வெளிநாட்டு நாணயம் செலவிடப்படாத அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்காக அனுமதி வழங்குதல்.

உள்ளூர் கைத்தொழிற்சாலைகள், விவசாயத்துறை, ஏற்றுமதி தயாரிப்பு மற்றும் உள்ளூர் நுகர்வுக்கான பொருட்களை இறக்குமதிக்கு அனுமதி வழங்குதல்.

இதற்கமைவாக மேலே குறிப்பிடப்பட்ட படிமுறைக்ளை நடைமுறைப்படுத்துவதற்காக 1969 ஆம் ஆண்டு இலக்கம் 1 இன் கீழான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான விதிகளை அறிந்து வெளியிடப்பட்ட 04 விசேட வர்த்தமானிகளுக்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கென சமர்ப்பிப்பதற்கு நிதி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# சம்பிக்கவின் மனு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவருக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகள் ஒத்தி வைக்கப்பட்டன.

குறித்த மனு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த மனுவை எதிர்வரும் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ராஜகிரிய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தின்போது முறையற்ற விதத்தில் செயற்பட்டமை மற்றும் நபர் ஒருவரை காயத்துக்கு உள்ளாக்கியமை தொடர்பாக சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றில் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக வெலிக்கடை பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சுதத் அஸ்மடல நீதிமன்றில் முன்னிலையானதை தொடர்ந்து கடந்த ஜூன் 3 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதேவேளை குறித்த விபத்து சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட பாட்டலி சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

71

கலாநிதி முருகர் குணசிங்கம்

ஆனால் கனடா போன்ற ஒரு பெரு நாட்டில் பல்லினக் கலாசாரம் நடைமுறையில் உள்ள நாட்டில் மூன்று இலட்சத்திற்கும் மேலான தமிழர்கள் வாழ்வது பாரியளவில் அங்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி இருக்க மாட்டாது.

சமய, கலை, கலாசார, மொழி அடிப்படையிலான தாக்கமும் விளைவுகளும் புலம்பெயர் தமிழர்களால் குறிப்பிடத்தக்களவு தாய்நாட்டிலும் புகுந்த நாட்டிலும் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தாம் வாழும் நாடுகளிளெல்லாம் நூற்றுக்கணக்கான சைவக் கோயில்களையும் கலை, பண்பாட்டு, மையங்களையும் ஆயிரத்துக்கு மேலான தமிழ் மொழிப் பாடசாலைகளையும் நிறுவி அதனூடாகத் தமது சகல சமூக விழுமியங்களையும் அடையாளங்களையும் பேணிப் பாதுகாத்து வருகின்றார்கள்.

அத்தோடு தமது தாய் நாட்டையும் புகுந்த நாட்டையும் அவ்விரு நாடுகளிலும் வாழும் தமது தமிழ் உறவிகளின் துயர் துடைப்புக்காகத் தம்மால் முடிந்த பண உதவிகளையும் செய்து வருகின்றார்கள்.

எடுத்துக்காட்டாக 2004 ஆம் ஆண்டு சுனாமியில் வடக்கு, கிழக்கு வாழ் தமிழர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டபோது தமது பாரிய உதவிகளைச் செய்து இருந்தமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

மேலும் தமிழ் ஈழத்தில் உள்ள இந்து சைவக் கோயில்களின் புனர்நிர்மாணப் பணிகளுக்காகவும் புதிய கட்டடங்கள் கட்டுவதற்காகவும் அதிகப் பணத்தை வழங்கி இருக்கின்றனர்.

ஏற்கனவே குறிப்பிட்டது போல மலேசியா வாழ் ஈழத்தமிழர்களும் ஏனைய புலம்பெயர்ந்து வாழுகின்ற நாடுகளில் உள்ள தமிழர்களும் தமிழ் ஈழத்தில் உள்ள குறிப்பாக அவரவர் கிராமங்களில் உள்ள பாடசாலைகளின் வளர்ச்சிக்காக அப்பாடசாலையின் பெயரில் அல்லது பழைய மாணவர் சங்கங்கள் என்பனவற்றை அமைத்து அதனூடாகப் பணம் சேகரித்து அந்த அந்தப் பாடசாலைகளுக்கு அன்பளிப்பாக வழங்கி இருக்கின்றனர்.

அதன்மூலம் பல பாடசாலைகள் திருத்தி அமைக்கப்பட்டு தமது கல்விச் சேவையினை தமிழ் மாணவர்களுக்குத் தொடர்ந்து வழங்க முடிந்தது.

அத்தோடு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் மட்டக்களப்புப் பல்கலைக் கழகத்திலும் படித்த பழைய மாணவர்கள் மேற்படி பல்கலைக்கழகங்களுக்கு பல ஆயிரக்கணக்கான நூல்களையும் பல இலட்சக்கணக்கான வரலாற்று ஆவணங்களையும் தாம் வாழும் நாடுகளில் தேடிப்பெற்று, அவைகளை நன்கொடையாக வழங்கி இருக்கின்றார்கள்.


பிரித்தானியர் ஆளுகையின்போது அதற்குப் பின்னரும் யாழ்ப்பாணக்குடா நாடு அல்லது யாழ்.மாவட்டம் கல்வியில் முதற்தரம் வாய்ந்த கல்விப் பெறுபேறுகளைப் பெற்ற மாகாணமாக இலங்கையில் திகழ்ந்தது.

ஆனால் இப்போது இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களுள் கடைசி மாகாணமாகக் கல்வித் தரத்தில் தாழ்ந்து கிடக்கின்றது.

இதற்கு அடிப்படைக் காரணம் தரம் வாய்ந்த ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பலர் நாட்டை விட்டு வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றமையாகும்.

அத்தோடு வல்லமை மிக்க, திறமையுள்ள பெற்றோர்களும் அவர்களின் திறமைசாலிகளான பிள்ளைகளும் புலம்பெயர்ந்து சென்றமையும் நாட்டில் இடம்பெற்ற போரும் இடப்பெயர்வுகளும் தமிழர்களின் கல்வியில் தாக்கத்தினையும் விளைவுகளையும் ஏற்படுத்தத் தவறவில்லை.

பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வுகளுக்குத் தோற்றும் தமிழ் மாணவர்களுள் சில ஆயிரக்காணக்கானவர்களே பல்கலைக்கழக அனுமதி பெற்றுத் தமது கல்வியைத் தொடர முடிகிறது.



பல ஆயிரக்கணக்கான தமிழ் இளம் தலைமுறையினருக்கு உயர்கல்வி வாய்ப்புகள் கிடைப்பது இல்லை.

எனவே புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுள் செல்வம் படைத்தவர்கள் தமிழ் பிரதேசங்களில் பல தனியார் பல்கலைக்கழகங்களையும் தொழில்நுட்பக் கல்லூரிகளையும் தனியார் மருத்துவப் பல்கலைக்கழகங்களையும் கட்டி இருந்தால் அம்மாணவர்களுக்கு இவ்வாய்ப்பைக் கொடுத்து அந்த சமூகத்தைத் தூக்கி நிறுத்தி இருக்கலாம்.

அத்தோடு பலருக்குத் தொழிற்றுறை சார்ந்த தொழில்நுட்பக் கல்வியும் கிடைத்திருக்கும். அதன்மூலம் பல ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து இருக்கும்.

இந்த விடயத்தில், புலம்பெயர்ந்து வாழும் செல்வம் படைத்த ஈழத்தமிழர்கள் கோட்டை விட்டுவிட்டார்கள். குறைந்தபட்சம் கோடிக்கணக்கில் வருமானம் பெறும் வெளிநாடுகளில் உள்ள சைவக் கோயில்கள் ஒன்றுசேர்ந்து பணத்தை முதலிட்டு மேற்படி முயற்சியில் ஈடுபட்டு இருக்கலாம்.

ஆனால், அவ்வாறான தொலைநோக்குப் பார்வை, ஈழத்தமிழர்கள் மத்தியில் கருகிப் போய்விட்டது என்றே கருத முடிகிறது.

இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான தனியார் பல்கலைக்கழகங்களைக் கட்டி நல்ல முறையில் கல்விப் பணி செய்வதோடு வருமானமும் பெறுகின்றார்கள்.

இதனை ஒரு முன்மாதிரியாகப் பார்ப்பதற்கு புலம்பெயர் ஈழத்தமிழர்கள் தவறிவிட்டார்கள் என்பது மிகவும் வேதனைக்கு உரியது.

தாம் வாழும் நாடுகளில் தமிழ்ப் பாடசாலைகளை நூற்றுக்கணக்கில் தோற்றுவித்து ஆயிரக்கணக்கான இளம் தலைமுறையினருக்கு தமிழ்மொழிக் கல்வியையும் தமிழ்க்கலை, கலாசாரம், பண்பாடு, வரலாறு போன்ற துறைகளிலும் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் மூலம் அறிவு புகட்டி வருகின்றார்கள்.

இதன் வழியாகத் தாம் வாழும் நாடுகளில் தமிழ் மொழியைப் பாதுகாத்து அதனைத் தமது இளம் தலைமுறையினரிடம் கையளித்துப் பாரிய பங்களிப்பைச் செய்து இருக்கின்றார்கள்.

தமது தாய் நாட்டில் வாழும் தமது குடும்பம், உறவுகள், நண்பர்களுடன் தமிழ் மொழியில் தொடர்புகளை மேற்கொள்ளும் அளவிற்குத் தமது இளம் தலைமுறையினரைத் தமிழ் மொழியில் பேசக்கூடியவர்களாக உருவாக்கி இருக்கின்றனர்.

மேலைத்தேசக் கலாசார சூழலில் வாழுகின்ற பத்து இலட்சத்திற்கும் மேலான ஈழத்தமிழர்களுள் குறிப்பிடத்தக்க தொகையினர் மேலைத்தேசக் கலாசாரத்தையும் பழக்கவழக்கங்களையும் உள்வாங்கியுள்ளனர் என்பதனை மறுப்பதற்கு இல்லை.

அவர்கள் தத்தமது நாடுகளில் வாழும்போது அத்தகைய கலாசாரப் பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவது அவர்கள் தனிப்பட்ட உரிமை என்றும் கொள்ளலாம்.

ஆனால் அவர்கள் தமது தாய் நாட்டுக்குச் செல்லும்போது அந்த நாட்டுக்கு ஒவ்வாத மேலைத்தேசக் கலாசாரப் பண்பாடுகளையும் தம்முடன் எடுத்துச் செல்வது தமிழர்களின் பாரம்பரிய பண்பாடு பழக்கவழக்கங்களைச் சிதைக்கும் முயற்சியாகவே நோக்க முடிகிறது.

ஆங்கில மொழியிலேயே பேசுவது, மேலைத்தேச அரைகுறையான நடை, உடை பாவனைகளை வரித்துக் கொள்வது, மது, போதைப் பொருட்களைத் தாராளமாகப் பாவிப்பது போன்றவைகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இவ்வாறான நடைமுறைகளும் பழக்கவழங்கங்களும் புலம்பெயர் தமிழர்களால் தமிழ் ஈழத்திற்கும் கொண்டு வந்து இறக்கப்படுவது தமிழர்களின் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களைச் சிதைக்கும் சக்திகளாகவே காணப்படுகின்றன.

அத்தோடு இவ்வாறு தாய்நாட்டுக்குச் செல்பவர்கள் தமது வெளிநாட்டுப் பணங்களை அங்கு மாற்றி அந்தப் பணங்களை வீசியெறிந்து தங்கப்பவுண்களில் செய்த நகைகளை வாங்கி கை, கழுத்து, காது, மூக்கு என்று அடுக்கடுக்காகப் போட்டுக் கொண்டு திரிவதும் தாய்நாட்டில் உள்ளவர்களை வெகுவாகப் பாதிக்கும் விடயமாக உள்ளது.

இவ்வாறானவர்களின் நடவடிக்கையினால் இளம் தலைமுறையினர் மிகவும் உளவியல் ரீதியாகப் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

எந்த ஓர் இளம் வயதினரையும் தங்கள் எதிர்கால இலட்சியம் என்னவெனக் கேட்டால் அதற்கு அவர்கள் வெளிநாடு செல்வதேயாகும் என்று பதில் அளிப்பார்கள்.

அந்த அளவுக்கு அவர்கள் மேற்படி புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் நடவடிக்கையினால் ஈர்க்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்களது படிப்பு நிச்சயம் பாதிப்படைந்திருக்கும்.

இவை பற்றிய பல்வேறு செய்திகள் தினமும் இணையத்தளங்களின் ஊடாகவும் பத்திரிகைகள் ஊடாகவும் தொலைக்காட்சிகள் ஊடாகவும் வந்த வண்ணம் இருப்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் குறிப்பாகப் பல்லினக் கலாசாரத்தை ஊக்குவித்து அதனைத் தமது நாட்டிற்குள் உள்வாங்கும் நாடுகள் ஈழத்தமிழ் சமய, மொழி, கலை, பண்பாடு, மொழி சார்ந்த பல்வேறு அமைப்புக்களையும் அவைகளின் செயற்பாடுகளையும் மக்கள் சுறுசுறுப்புடன் பங்கு பற்றுவதனையும் தமது பல்லினக் கலாசாரக் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் கிடைத்த ஒரு வெற்றியாகவே பார்ப்பார்கள்.

(தொடரும்)

# ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இருந்து விலகத் தீர்மானிக்கவில்லை


## அமைச்சர் ரம்புக்வெல

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இருந்து விலகுவது தொடர்பில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என இலங்கை அரசு அறிவித்துள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பில் கூறிய கருத்துக்களை சில ஊடகங்கள் தவறாக வெளியிட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளது.

செய்தியாளர் சந்திப்பின்போது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இருந்து இலங்கை விலகுவது குறித்து அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல எதனையும் குறிப்பிடவில்லை. தீர்மானம் 30/1 இன் இணை அனுசரணையிலிருந்து விலகுவதற்கு தேவையான நடவடிக்கைகளை இலங்கை ஏற்கனவே எடுத்துள்ளது என்றே அவர் குறிப்பிட்டார் எனவும் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



தீர்மானம் 30/1 இன் இணை அனுசரணையிலிருந்து கடந்த பெப்ரவரி மாதம் இலங்கை விலகியது. ஜெனிவாவில் மார்ச் மாதம் இடம்பெற்ற அமர்வின் போது இந்த முடிவை இலங்கை அறிவித்தது.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை ஐ.நா. மனித உரிமைகள் பே ரவை 45 ஆவது அமர்வின் தொடக்கத்தில் பேசிய ஆணையாளர் மிச்செல் பச்லெட், 30/1 தீர்மானத்திற்கான ஆதரவை வாபஸ் பெற்றதிலிருந்து இலங்கையின் புதிய அரசாங்கம் மனித உரிமைகள் பேரவைக்கான தனது கடமைகளை மறுத்து வருவதாகக் கவலை வெளியிட்டார்.

அமைதி, நல்லிணக்கம் மற்றும் நிலையான அபிவிருத்தி ஏற்படுவதற்கு அச்சுறுத்தல்கள் இல்லாத சூழல் ஏற்பட வேண்டும். இது குறித்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் ஊக்குவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (2-7)

# நோயாளிகள் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு செம்மஞ்சள் நிறத்தில் ஒளிர்ந்தது ஆசியாவின் அதிசயம்


(கொழும்பு)

ஆசியாவின் அதிசயம் என வர்ணிக்கப்படும் கொழும்பு தாமரை கோபுரம் நேற்று முன் தினம் மாலை 6 மணிக்குப்பிறகு செம்மஞ்சள் நிறத்தில் ஒளிரவிடப்பட்டுள்ளது.

நோயாளிகள் பாதுகாப்பு தினத்தை குறிக்கும் வகையில் சுகாதார அமைச்சின் வளாகம் உட்பட நாட்டின் அனைத்து வைத்தியசாலைகளும் நேற்று செம்மஞ்சள் நிறத்தில் ஒளிரும் என்று சுகாதார அமைச்சகம் அறிவித்திருந்த நிலையில் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பால் ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் 17 ஆம் திகதி நோயாளிகளின் பாது காப்பிற்கான சர்வதேச தினமாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

அதன்படி, உலக சுகாதார அமைப்பின் 194 உறுப்பு நாடுகள் 2020 ஆம் ஆண்டில் இந்த நாளை உலக முன்னுரிமையாக நோயாளிகளின் பாதுகாப்போடு கொண்டாடியது. (2-7)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2020

### கஜிவன்



மனசாட்சிக்கு நேர்மையானவர்கள் மட்டும் எப்போதும் மற்றவர்களுக்கு கெட்டவர்களாகத் தான் தெரிவார்கள்!

### நிஷா

**வாழ்க்கை தரும் பாடம்**

1. எதுவும் சில காலம் தான்..
2. எதிர்பார்ப்பை குறைத்துக் கொண்டால், ஏமாற்றம் ஒன்றும் பெரிதாக தெரியாது.
3. நம்பு... யாரையும் முழுமையாக நம்பாதே! உன்னை மட்டும் வாழ்வில் நம்பு.
4. சிந்தனை செய்... கோபப்படாதே..
5. வாழ்வது ஒரே ஒரு வாழ்க்கை அதை அர்த்தமுள்ளதாக வாழ்ந்து விட்டுப்போ..!

### நதியா



எவரையும் பார்த்து இவருக்கென்ன குறை என்று எடை போட்டு விடாதே! வலிகளோடு தான் வாழ்கிறார்கள் பலர்!

### நதியா

ஆடம்பரமா வாழனும் என்ற ஆசை இல்ல... உன்கூட வாழனும்...உனக்காகவே வாழனும் அதுதான் என் ஆசை...!



### கமில்ரன்



சுகங்களை பகிர்ந்து கொள்ளும் அன்பை விட... சோகங்களை பகிர்ந்து கொள்ளும் அன்பு உண்மையானது..!

### டஞ்சன்

இந்த உலகம் ஒரு சோதனைக் கூடம்..! இங்கு சோதனையை தாங்கும் உள்ளம்..! நாளை சொர்க்கத்திற்குச் சொந்தமாகிறது..!




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2020 - 16.10.2020

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## எண்ணற்ற நற்பலன்கள் கிடைக்கும்



சார்வரி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் தன் சொந்த வீடான தனுசு இராசியில் இருந்தபடி குரு, பலம் பெற்று உங்கள் இராசியைப் பார்க்கின்றார். புதனும் சூரியனும் சுக ஸ்தானத்தில் சஞ்சரித்து, புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார்கள். லாபாதிபதி செவ்வாய் லாப ஸ்தானத்தில் வீற்றிருக்கின்றார். எனவே இந்த மாதம் எண்ணற்ற நற்பலன்கள் கிடைக்கும் மாதமாக கருதலாம்.

இப்பொழுது 12 ஆம் இடத்தில் ராகுவும், 6 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். எனவே இடமாற்றம், தொழில் மாற்றம், வீடுமாற்றம் போன்றவை அவரவர் சுய ஜாதகங்களுக்கேற்ப அமையும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

7 இல் சனி இருப்பதை 'கண்டகச்சனி என்று சொல்வது வழக்கம். எனவே, தங்களுக்கோ, தங்கள் குடும்பத்தினர்களுக்கோ ஆரோக்கியத்தில் மட்டும் சிறு சிறு தொல்லைகள் வந்து அகலும். பிள்ளைகளின் போக்கில் மாறுபாடு தென்படும். சுக ஸ்தானத்தில் சூரியனும், புதனும் இணைந்திருப்பதால் பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்.

### துலாம் புதனின் சஞ்சாரம்

செப்டெம்பர் 21 ஆம் திகதி, துலாம் இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு பஞ்சம ஸ்தானத்தில் புதன் வருவது யோகம் தான். பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுவடைவதால் பங்காளிப் பகை அகலும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். மாமன், மைத்துனர் வழியில் இதுவரை இருந்த விரோதங்கள் விலகும். கவனக்குறைவால் ஏற்பட்ட இழப்புகளை எல்லாம் ஈடுகட்டுவீர்கள்.

### சிம்ம சுக்கிரனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் செப்டெம்பர் 28 ஆம் திகதி சிம்ம இராசிக்குச் செல்கின்றார். சகாய ஸ்தானத்திற்கு செல்லும் சுக்கிரனால் சுபவிரயங்கள் அதிகரிக்கும். குறிப்பாக குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். தங்கம், வெள்ளி போன்ற விலை உயர்ந்த பொருட்களை வாங்கும்




வாய்ப்பு உண்டு. நீண்ட நாட்களுக்கு முன்பு கட்டிய வீட்டை, பராமரிப்பதற்காக செலவிட வேண்டிய சூழ்நிலை அமையும். சகோதர ஒற்றுமை பலப்படும். வழக்குகள் சாதகமாக முடியும்.

### புதனின் வக்கிர இயக்கம்

செப்டெம்பர் 30 ஆம் திகதி, துலாம் இராசியில் புதன் வக்கிரம் பெறுகின்றார். அதன்பிறகு ஒக்டோபர் 8 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் வக்கிரம் பெறுகின்றார். இதுபோன்ற வக்கிர காலங்களில் மிகுந்த கவனத்துடன் செயற்பட வேண்டும். பொருளாதாரப் பற்றாக்குறை அதிகரிக்கும். புதிய பாதை புலப்படும். அருளாளர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலம் அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக்கொள்ளலாம். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சி நடைபெறும். குறிப்பாக எதிலும் அதிக விழிப்புணர்ச்சியோடு இருக்க வேண்டிய நேரமிது. இம்மாதம் விஷ்ணு கவசம் பாடி, இல்லத்து பூஜை அறையில் ஸ்ரீமன் நாராயணனுக்குரிய பதிகங்களைப் பாடி வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் கண்டகச்சனியின் ஆதிக்கம் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கலாம். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதி கிடைக்கும். மாதத்தின் முற்பகுதியில் தாய்வழி ஆதரவு உண்டு. உடன்பிறப்புகளால் சிறுசிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும். வருமானம் திடீர் திடீரென வந்தாலும், உடனுக்குடன் செலவாகி விடும். பணி புரியும் பெண்களுக்கு இடமாற்றம் உறுதியாகலாம்.

## தொட்டது துலங்கும் தொல்லைகள் அகலும்



சார்வரி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன் தன ஸ்தானத்தில் சஞ்சரித்து குருவால் பார்க்கப்படுகின்றார். எனவே 'குரு சந்திரயோகம்' உருவாகின்றது. உங்கள் இராசிக்கு யோகம் தரும் கிரகமான செவ்வாய், பத்தாமிடமான தொழில் ஸ்தானத்தில் பலம்பெற்றுச் சஞ்சரிக்கின்றார். புதனும் உச்சம்பெற்று சகாய ஸ்தானத்தில் சூரியனோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். எனவே இந்த மாதம் தொட்டது துலங்கும், தொல்லைகள் அகலும்.

'6-இல் குரு ஊரில் பகை' என்பார்கள். உங்களைப் பொறுத்தவரை சொந்தம், சுற்றம் அனைத்திலும் மறைமுக எதிர்ப்புகள் இருந்து கொண்டே இருக்கும். குருவின் பார்வை 2, 10, 12, ஆகிய இடங்களில் பதிவதால் ஒரு சிலருக்கு இடமாற்றங்கள், ஊர் மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் ஏற்படலாம். 'குரு மங்கள யோகம்' இருப்பதால் பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். செவ்வாய் பலத்தால் பூமி யோகம் உண்டு. வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. 'புத ஆதித்ய யோகம்' இருப்பதால் உடன்பிறப்புகளின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

### துலாம் புதனின் சஞ்சாரம்

செப்டெம்பர் 21 ஆம் திகதி, துலாம் இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்திற்கு செல்லப்போகும் புதன் நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுப்பார். நண்பர்களின் ஆலோசனை தொழில் முன்னேற்றத்திற்கு கைகொடுக்கும். தாயின் உடல்நலம் சீராகும். முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடுகள் கிடைக்கும். உறவினர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். பிரபலஸ்தர்களின் ஒத்துழைப்போடு சில பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள்.

### சிம்ம சுக்கிரனின் சஞ்சாரம்

செப்டெம்பர் 28 ஆம் திகதியன்று சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் தனஸ்தானத்திற்கு வரும்பொழுது குடும்பத்தில் தனவரவு திருப்தி தரும். தடைகளும், தாமதங்களும் அகலும். இடையூறு செய்த உறவினர் விலகுவர். என்றைக்கோ வாங்கிப்போட்ட சொத்து இப்பொழுது பலமடங்கு விலை




உயர்ந்த இலாபத்தைத் தேடித் தரும்.

### புதனின் வக்கிர இயக்கம்

செப்டெம்பர் 30 ஆம் திகதி துலாம் இராசியில் புதன் வக்கிரம் பெறுகின்றார். 3, 12 இற்கு அதிபதியான புதன் வக்கிரம் பெறுவது நன்மை தான். விரயாதிபதி வக்கிரம் பெறும்பொழுது விரயத்திற்கேற்ற வரவு முன்னதாகவே வந்து சேரும். பயணங்கள் பலன் தருவதாக அமையும். புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் இடமாற்றங்கள், ஊர்மாற்றங்கள் உறுதி ஆகலாம்.

வீட்டைப் பராமரிப்பதற்காக ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். ஒக்டோபர் 8 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் வக்கிரம் பெறும் பொழுது சகோதரர்களால் நன்மை கிடைக்கும்.

இம்மாதம் பௌர்ணமி அன்று விரதமிருந்து பஞ்சமுக விளக்கேற்றி இல்லத்துப் பூஜை அறையில் காமாட்சியம்மன் பதிகம் பாடி வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

மகிழ்ச்சி கூடும் மாதம் இது. பொருளாதாரத்தில் இருந்த ஏற்ற-இறக்க நிலை அகலும். உறவினர்களின் அன்புத்தொல்லைக்கு ஆட்பட நேரிடும். பெற்றோர்களின் பிரியம் மட்டுமல்லாமல் ஆதரவும் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். பணிபுரியும் பெண்கள் சுயதொழில் தொடங்க ஆர்வம் காட்டுவர். வாகனம் வாங்கும் முயற்சி வெற்றி தரும். பிரச்சினைகளில் இருந்து விடுபட பெருமாள், லட்சுமியை வழிபடுவது நல்லது.

(தொடரும்...)

# சுற்றுலாத்துறை தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம்

(கொழும்பு)

சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் ஓய்வூதிய கொடுப்பனவை வழங்குவதற்கு திட்ட அறிக்கை வகுக்கப்படுவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிகா விஜேசிங்க தெரிவித்தார்.

ஏப்ரல் 21 தாக்குதல் மற்றும் கொரோனாத் தொற்றால் சுற்றுலாத்துறையை சேர்ந்த தொழிலாளர்கள், தொழிலை இழந்துள்ள நிலையில் இதனைக் கவனத்திற் கொண்டு இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இவ் ஓய்வூதியத்தை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு மாத்திரமே வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் தமது அதிகார சபையில் இதுவரை சுமார் இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-6)



## ஆன்மீகம்


## நம்மை நாமே எடை போடுவோம்!

எங்க வீட்டில மட்டும் என்னைப் படிக்க வச்சிருந்தா இந்த சமயத்தில நான் பெரிய ஆளா ஆயிருப்பேன்' 'பணக்கார பையனா பிறந்திருக்கணும்! என்ன செய்யுறது? வாழ்க்கையில நினைச்சதை எட்ட முடியல' 'எங்க அண்ணன் மட்டும் கொஞ்சம் உதவி செய்திருந்தா இந்நேரம் என்னைப் பிடிக்க முடியாது.' - இப்படியெல்லாம் பலர் பல சமயங்களில் பேசுவதை நாம் கேட்டிருக்கிறோம். ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் இந்த வசனங்கள் எல்லாமே அர்த்தமற்றவை என்று விளங்கும்.

சாதனையாளர்களின் சரித்திரங்களைப் படித்தாலும் மேற்கண்ட உரையாடல்கள் எல்லாம் மிகவும் தவறானவை என நாம் அறியலாம். வாழ்வில் வெற்றி பெற்றவர்கள் எல்லாம் ஒரே வாய்ப்பில் அந்த உச்ச நிலையைத் தொட்டுவிடவில்லை.

அடுத்தவர்கள் யாரும் கைதூக்கி அந்த ஆசனத்தில் அவர்களை அமர்த்தி வைக்கவில்லை. வாடியும், வருந்தியும், வதைபட்டும்தான் அந்த வளர்ச்சியை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். 'பறவைகள் அனைத்திற்கும் இறைவன் உணவைத் தருகிறார். ஆனால், அந்த உணவை அவற்றின் கூடுகளுக்குள்ளேயே அவர் கொடுப்பதில்லை' என்கிறார் ஓர் அறிஞர். 'கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்று நீ சோம்பி உட்கார்ந்தால் தெய்வம் கூரையைத்தான் பிய்த்துக் கொடுக்கும்' என்று பொட்டில் அடித்தமாதிரி புலப்படுத்துகிறார் கவியரசர் கண்ணதாசன். அப்படியென்றால் தெய்வ வழிபாடு தேவையற்ற ஒன்றா? என்று நாம் நினைக்கலாம்.

உயர்ந்த வெற்றிக்கான ஊட்ட மருந்தே உன்னத தெய்வ வழிபாடு தானே! அந்தப் பிரார்த்தனை எப்படி இருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்வோம்! நாம் செய்ய வேண்டியது என்ன என்பதை நாம் வாழும் பூமிப்பந்தே நமக்கு உணர்த்துகிறது.



இந்த உலகம் உருண்டை. ஒரு நொடி கூட நிற்காமல் சுழன்று கொண்டே இருக்கிறது. அப்படி நாமும் ஓய்வின்றி பணிபுரிய வேண்டும். அதுமட்டுமல்ல, தான் வலிவும், பொலிவும் பெற சூரியனையும் பூமி சுற்றி வருகிறது. அப்படி நாமும் கோயிலை வலம் வந்து தின்மையும் நன்மையும் பெற வேண்டும். புகழ்பெற்ற அறிவியல் மேதை, டாக்டர் ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர். வெற்றி பெற்ற அந்த விஞ்ஞானியிடம் ஒருவர் கேட்டார்: "உங்களது அபார வெற்றியின் இரகசியம் என்ன?"

அற்புதமாக பதிலளித்தார் அந்த அறிவியல் மேதை: "நான் தினமும் இறைவனைப் பிரார்த்திக்கத் தவறுவதில்லை. இறைவா! அனைத்து வெற்றிகளும் உன் அருளால்தான் என்று பரிபூரண சரணாகதி அடைவேன். ஆனால், நான் எந்தக் கடமையை ஆற்றும் போதும் நான் முழுமையாக அதில் ஈடுபட்டு, அந்தச் செயல்களை முழுமையாக, பிழையறச் செய்து முடிப்பேன்."

விண், மண், காற்று, நெருப்பு, தண்ணீர் என ஐம்பூதங்களின் அற்புதக் கலவையாகத் திகழும் இந்த அரிய பூமியில் மெய், வாய், கண், மூக்கு, செவி என ஐம்புலன்களும் அரிய மூளைத்திறனும் கொண்ட மானிடராக நாம் பிறந்தும் உயர் நிலையை அடையவில்லை என்றால் அது நம் பிழை தானே! ஒவ்வொருவரும் தனக்குத் தானே ஒரு தேர்வு நடத்திக் கொண்டு உரிய மதிப்பெண்ணை ஒவ்வொரு நாளும் பெற்று தன் வளர்ச்சியை ஆசிரியர் நிலையில் நின்று அன்றாடம் கவனிக்க வேண்டும்.

(தொடரும்)

## செய்த்துளிகள்

## 33 ஆயிரம் கிலோ மஞ்சள் 3 ஆயிரம் கிலோ உழுந்து மீட்பு

## 10 பேர் அதிரடியாக கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் கடத்தி வரப்பட்ட நிலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 33 ஆயிரம் கிலோ மஞ்சள் மீட்கப்பட்டுள்ளதுடன் அதனுடன் தொடர்புடைய 10 பேர் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட 33 ஆயிரம் கிலோ மஞ்சளுடன் மூன்று கொள்கலன் பாரவூர்திகளும் மற்றும் 3 ஆயிரம் கிலோ உழுந்துடன் 7 லொறிகளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. (ஜ-2)

## களனி பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

களனி பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் நேற்று முன்தினம் பல்கலைக்கழகத்திலிருந்து பேரணியாக சென்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு கமரா கட்டமைப்பை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் சில மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டிருந்ததையடுத்து இவ்வகுப்புத்தடையை தளர்த்துமாறு கோரியே குறித்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பமளிக்கப்பட்ட போதிலும் அப் பேச்சுவார்த்தை தீர்வின்றியே நிறைவடைந்ததாக அப்பல்கலை மாணவர்கள் தெரிவித்தனர். (ஜ-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 130 |
| பச்சைமிளகாய் | 200 | 100 | 180 | 160 |
| தக்காளி | 200 | 120 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 110 | 110 | 80 |
| கோவா | 130 | 140 | 140 | 120 |
| கரட் | 80 | 200 | 200 | 200 |
| பூசணி | 120 | 80 | 120 | 120 |
| புடோல் | 100 | 80 | 80 | 120 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 150 | 160 | 160 |
| பெரிய வெங்காயம் | 170 | 130 | 180 | 180 |
| பாகற்காய் | 350 | 180 | 350 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 60 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 150 | 140 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 140 |
| லீக்ஸ் | 100 | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 100 | 80 | 90 | 100 |
| கறிமிளகாய் | 300 | 200 | 260 | 320 |
| முருங்கைக்காய் | 350 | 250 | 240 | 200 |
| போஞ்சி | 320 | 200 | 300 | 320 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 80 | 70 |
| கீரை - 1 பிடி | 40 | 15 | 30 | 40 |
| தேசிக்காய் | 120 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 220 | 200 | 200 | 240 |
| முள்ளங்கி | 100 | 80 | 70 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 30 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | -- | 50 | 100 |




# பிச்சைக்காரனும் தங்க நாணயமும்

ஒரு பிச்சைக்காரன் உணவுக்காக வீடு வீடாக அலைந்தான். அவன் மிகவும் அசிங்கமாக, கிழிந்த உடைகளோடு இருந்தான். ஒரு பழைய கோணிப் பையே அவனுக்கு உடைமையாக இருந்தது.

ஒவ்வொரு வீடாகப் போய் பார்த்து விட்டு எதுவும் கிடைக்காவிட்டால் அந்த வீட்டின் முன்னே போய் நின்று வீடு மிகப் பெரியது.

ஆனால் இங்குள்ளவர்களுக்குப் பணம் நிறைய இருந்தும் இன்னும் அதிகமாகவே எதிர்பார்க்கிறார்கள். கடைசியில் எல்லாவற்றையும் இழப்பார்கள் என்று சொன்னான்.

இன்னொரு வீட்டுக்குப் போனான். உணவு கிடைக்கவில்லை. இந்த வீட்டில் உள்ளவன் கோடீஸ்வரன்.

ஆனால் இருக்கிற பணத்தில் திருப்தியடையாமல் சூதாடினான். கடைசியில் எல்லாவற்றையும் இழந்தான்.

எனக்கோ கொஞ்சப் பணம் கிடைத்தால் போதும். திருப்தி கொள்வேன். அதிக ஆசைப்படமாட்டேன் என்று அந்த பிச்சைக்காரன் சொன்னதும் அதிர்ஷ்ட தேவதை அவன் முன்னே தோன்றியது.

நான் உனக்கு தங்க நாணயங்கள் கொடுத்து உதவுகிறேன் என்றது தேவதை. பிச்சைக்காரன் உடனே அவன் கோணிப்பையை விரித்தான்.

அப்போது அதிர்ஷ்ட தேவதை "கோணிப்பைக்குள் விழுகின்ற நாணயங்கள் தங்கமாக இருக்கும். அவை நிலத்தில் விழுந்தால் தூசியாகி விடும் என்று சொல்லியது.

பிச்சைக்காரன் மிகுந்த மகிழ்ச்சியோடு இருந்தான். அதிர்ஷ்ட தேவதை கோணிப்பை நிரம்பியதும் தேவதை தங்க நாணயங்களைக் கொட்டுவதை நிறுத்தியது.



உன் கோணிப்பையில் இருக்கிற நாணயங்கள் உன்னை அரசனை விட பணக்காரனாக்கும். அது போதும் தானே?" என்றது அதிர்ஷ்ட தேவதை.

"போதாது. இன்னும்வேண்டும்" என்றான் பிச்சைக்காரன். அதிர்ஷ்ட தேவதை மேலும் சில தங்க நாணயங்களைக் கொடுத்து விட்டு, "உன் கோணிப்பை இதற்கு மேல் தாங்காது" என்றது.

பிச்சைக்காரன் "இன்னும் கொஞ்சம் வேண்டும்" என்றான். அதிர்ஷ்ட தேவதை மேலும் தங்க நாணயங்கள் கொடுத்தது. மறு விநாடி கோணிப்பை கிழிந்தது.

அதனுள் இருந்த நாணயங்கள் கீழே விழுந்து தூசியாகின. அதிர்ஷ்ட தேவதையும் மறைந்தது. பிச்சைக்காரன் திகைத்துப் போய் நின்றான்.

**நீதி: கிடைத்ததை வைத்து வாழவேண்டும். பேராசைப்பட்டால் உள்ளதும் போய்விடும்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கலாரசிகனின் கலைக்கோயில்

72

சோழர்கால ஓவியங்கள் பிராஸ்கோ என்ற முறையில் வரையப்பட்டுள்ளன. அதாவது சுண்ணாம்புச்சாந்து, கடுக்காயை நீரில் கலந்து சுவரில் ஒரு பூச்சுப் பூசி ஈரம் உலர்வதற்குள்ளாகப் பச்சிலைகள் மற்றும் மூலிகைச் சாறுகளுடன் பிசின்களையும் கலந்து தயாரிக்கப்பட்ட வண்ணக்குழம்புகளைப் பயன்படுத்தி அவ்வோவியங்கள் வரையப்பட்டுள்ளன.

ஓவியங்களில் மஞ்சள், சிவப்பு, பச்சை ஆகிய மூன்று நிறங்களே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. போர்க்காட்சிக்குச் சிவப்பு வண்ணமும் காதலுக்கு பச்சை, ஆன்மீகத்துக்கு ஆரஞ்சு மற்றும் மஞ்சள் கலந்த பொன்னிறம் என்று ஒவ்வொரு காட்சிக்கும் தனித்தனி வண்ணங்களைப் பயன்படுத்தித் தங்கள் திறமையை மேலும் நிரூபித்திருக்கிறார்கள் சோழர் கால ஓவியர்கள்.



நந்தி மண்டபம்

கருவறையைச் சுற்றியமைந்த உட்சுவர்களில் கண்டுபிடிக்கப்பட்ட சோழர்கால ஓவியங்களுக்கு மேல் நாயக்கர் காலத்தில் வேறு வகையான ஓவியங்கள் தீட்டப்பட்டு ராஜராஜன் காலத்து ஓவியங்கள் முழுவதுமாக மறைக்கப்பட்டிருந்தன.

இந்தியத் தொல்லியல் துறையின் உதவியோடு நாயக்கர் ஓவியங்கள் சுவரிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன.

இவ்வகையில் சோழர் கால ஓவியங்களை ஓரளவுக்கு மீட்க முடிந்ததே தவிர இன்னும் எல்லா ஓவியங்களும் வெளிவந்த பாடில்லை. பல சோழர் ஓவியங்கள் நாயக்கர் ஓவியங்களின் அடியில் மறைக்கப்பட்டுள்ளன.

ஓவியங்களுக்கு மேல் நாயக்கர் ஓவியங்கள் மட்டும் தீட்டப்படாதிருந்தால் சோழர்கால ஓவியங்கள் அஜந்தா ஓவியங்களுக்கு நிகராகப் பேசப்பட்டிருக்கும்.

**சிற்பங்கள்**

பெரிய கோயிலைக் கட்டிக்கொண்டிருந்த போது சிற்பிகள் களைத்துப் போகாமல் இருக்க ராஜராஜனே அவர்களுக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்ததாக ஒரு கதை உண்டு.

இது புனைவு என்றாலும் தன் கலைஞர்களுக்கு ராஜராஜன் கொடுத்த உச்சபட்ச மரியாதையே பெரிய கோயிலில் காணப்படும் காலத்தால் அழியாத சிற்பங்கள்.

பிற்காலச் சோழர் காலம் தமிழ்ச் சிற்பக் கலையின் மறுமலர்ச்சிக் காலமும் பொற்காலமும் ஆகும். தமிழ்நாட்டின் சிற்பங்களில் மூன்று முக்கியமான ஊடகங்களில் சோழர்கள் சாதனை புரிந்திருக்கிறார்கள். (தொடரும்)

மொட்டாக முளைத்தது மலர்ந்தே தீரும்; விடா முயற்சி கொண்டவனுக்கு வெற்றி கிடைத்தே தீரும்.
- சின்மயானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆளுந்தரப்பில் சேர்ந்தால் அடங்கி இருப்பதுதான் விதியா?

ராஜபக்ஷக்களின் அரசாங்கத்தில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இடம்பெற்றுள்ளனர்.

எனினும் அவர்கள் அரசாங்கம் செய்கின்ற அத்தனை விடயங்களையும் ஆதரிப்பவர்களாக இருப்பதனால், அவர்களால் தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் எதுவும் செய்ய முடியாமல் போகிறது.

குறிப்பாகத் தமிழர் தாயகத்தில் நடக்கின்ற நில ஆக்கிரமிப்புகள் மற்றும் இராணுவப் பிரசன்னம் என்பன தொடர்பில் அரச பக்கத்தில் உள்ள தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாய்திறக்காமல் மௌனிகளாக இருக்கின்றனர்.

தமிழர் தாயகத்தில் நடக்கின்ற விடயங்களைப் பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறினால், அஃது தங்களை அரச எதிர்ப்பாளர்களாகக் காட்டிவிடும் என்ற பயத்தில் இவர்கள் எப்போதும் மௌனிகளாகவே இருக்கின்றனர்.

இப்போது கூட தியாகி திலீபனின் நினைவேந்தல் குறித்த விவகாரங்கள் பேசுபடு பொருளாகியுள்ளன.

இது விடயத்தில் அரச தரப்பில் இருக்கக் கூடிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்தித்து நினைவுகூருவதன் அவசியத்தை எடுத்துரைத்திருக்க வேண்டும்.

இங்கு நினைவுகூருதல் என்பது தியாகி திலீபனை நினைவுகூருவது மட்டுமல்ல. மாறாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், மாவீரர் நாள் என நினைவுகூரல் நீண்டு செல்கிறது.

இந் நினைவுகூரல் என்பது தமிழ் மக்களின் உரிமை.

பொதுவில் இறந்தவர்களை நினைவுகூருவதென்பது மனிதர்களின் அடிப்படை உரிமையாகும்.

எனவே இந்த அடிப்படை உரிமையை தமிழ் மக்களுக்கு மட்டும் மறுதலிக்காமல், அதனை வழங்க வேண்டும் என்பதை அரசாங்கத்துக்குத் தெரிவிப்பது ஆளுந் தரப்பிலுள்ள தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் தலையாய கடமை.

எனினும் அவர்கள் அதனைச் செய்வதாகத் தெரியவில்லை.

அவர்களைப் பொறுத்தவரை அரச தரப்பில் இருப்பதாயின் வாய்பொத்தி மௌனிகளாக இருப்பதுதான் தங்கள் பணி என்று நினைக்கின்றனர்.

ஆனால் இதேநிலைமை முஸ்லிம் மக்களுக்கு ஏற்படுமாயின் ஆளுந்தரப்பில் இருந்தாலும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் உரிமையை உரக்கக் கூறுவர்.

அதுவும் முடியாது போகின், அனைவரும் ஒற்றுமைப்பட்டு தங்களின் எதிர்ப்பைக் காட்டுவர்.

ஆனால் நம்மவர்களிடம் அந்த நிலைமை இல்லாமல் இருப்பதுதான் மிகப்பெரும் துரதிர்ஷ்டம்.

# யாழில் மீள்குடியேற்றம் மற்றும் வீட்டுத்திட்டம் தொடர்பான பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வு

## அங்கஜன் இராமநாதன் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழில். மீள்குடியேற்றம் மற்றும் வீட்டுத்திட்டம் தொடர்பான பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தப்படும் என யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

வீட்டுத்திட்டம், மீள்குடியேற்றம், காணி கொள்வனவு மற்றும் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களின் கட்டுமானங்கள் காலதாமதம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் குறித்த கலந்துரையாடல் இடம் பெற்றது. இதன்போது அவர் கருத்துத் தெரிவிக்கையில், இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற் றம் மற்றும் வீட்டுத்திட்டம் சம்மந்தமான பிரச்சனைகள் தொடர்பில் நேரடியாக களவிஜயம் மேற்கொண்டு நிலமைகள் தொடர்பில் அறிந்து கொண்டுள்ளார். அவர்களுக்கு நானும் யாழ். மாவட்டத்தின் வீடமைப்பு மற்றும் மீள் குடியேற்றம் தொடர்பில் விளக்கம் தெரிவித்திருந்தேன். அந்த விடயம் தொடர்பில் அதிகூடிய கரிசனை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த உறுதியளித்தார்.

அது மட்டுமின்றி வீடமைப்பு தொடர்பான அமைச்சராக இருக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வடபகுதி மக்களின் வீட்டுத்திட்ட பிரச்சனை தொடர்பில் அதி கூடிய கவனம செலுத்தியுள்ளார். எமது இந்த புதிய அரசாங்கம் மூலம் விரைவில் காணி அற்றவர்களுக்கான காணி கொள்வனவு, வீடுகள் இல்லாமல் தவிப்போருக்கான வீட்டுத் திட்டங்களை இனம்கண்டு வழங்கல், நலன்புரி நிலையங்களில் வசிப்பவர் களுக்கு சொந்த வீடுகள் வழங்கல் போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வுகள் பெற்று மக்களுக்கு கொடுப்போம். 10 இலட்சம் பெறுமதியான வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்ட 70 குடும்பங்களின் வீட்டுத் திட்ட கட்டுமான செயற்பாடுகள் பிந்திய நிலமையில் காணப்படுவதன் காரணங்கள் கண்டறியப்பட்டு விரை வாக கட்டுமான பணி களை முடிவுறுத்த பயனாளிகளிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மற்றும் அரசாங்கத்தினால் காணி இல்லாதோரிற்கு இலவச காணி கொள்வனவிற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தமக்கு தேவையான காணிகள் இனம்காண்பதற்கு காலதாமதம் ஆகின்றது என தெல்லிப்பளை பிரதேச செயலகர் எஸ்.சிவஸ்ரீ சுட்டிக்காட்டினார். ஒதுக்கப்பட நிதி தங்களது காலதாமதத்தால் திரும்ப சென்றால் தமக்கு மட்டுமல்ல அடுத்தகட்டம் இனங்காணப்படவுள்ள பயனாளிகளுக்கும் நிதியை பெற்றுக்கொள்ளாமல் போய்விடும். அதனால் விரைவாக காணிகளை இனம்காணுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங் கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற குழுக் களின் பிரதித் தவிசாள ருமான அங்கஜன் இராமநாதன் மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் யாழ் மாவட்ட மேலதிக (காணி) அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், தெல்லிப்பளை பிரதேச செயலகர் எஸ் சிவஸ்ரீ பிரதேச திட்டமிடல் பணிப்பாளர், கிராம சேவகர்கள், அரச அலுவலர்கள், பயனாளிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (ம-03.8)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.45 மணிக்கு அபிஷேகமும் மாலை 6 மணிக்கு மூலமூர்த்தி பூசையும் அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து வீதியுலாவும் இடம்பெறும். (5)

## இலவச கண் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

இணுவில் லயன்ஸ் கழகம், இணுவில் அறிவாலயத்தோடு இணைந்து "இலவசக் கண்பரிசோதனையும் மூக்குக் கண் ணாடி வழங்கலும்" நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெறும். (இணுவில் கந்தசுவாமி கோவில் அருகில்) கண் தொடர்பான பரிசோதனைகள், காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறும். (5-4)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

கடவுள் வாரந்தோறும் சம்பளம் கொடுப்பதில்லை. வாழ்க்கை முடிவில் கொடுக்கிறார்.
- நியூட்டன்

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீடம், பலாலி வீதியில் திருநெல்வேலி சந்தியிலிருந்து பலாலி வீதி வேம்படி சந்தி வரை, பனிக்கர்லேன், திண்ணை விடுதி, தலங்காவில் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி கொமர்ஷல் வங்கி, தபால் பெட்டி சந்தி, கந்தர்மடம் சந்தி, இலுப்பையடி சந்தி, சிவன் அம்மன் வீதி, அன்னசத்திர வீதி, ஆரியகுளம் சந்தி, அம்மன் வீதி கந்தர்மடம், நாவலர் வீதியில் புகையிரத கடவையிலிருந்து அம்பலவாணர் வீதி அத்தியடி வரை, பலாலி வீதி பருத்தித்துறை வீதியிலிருந்து வீரமாகாளிகோவில் வரை, ஆரியகுளம் சந்தியிலிருந்து இராசாவின் தோட்ட சந்தி வரை, கம்பஸ் லேன், தின்னவேலி புறப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற்ரெட், நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், Bright Inn, AVNOR பிறைவேற் லிமிற்ரெட், டம்றோ பலாலி வீதி, IBC தமிழ், BCCAS, சிவதாஸ் கட்டடத்தொகுதி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** தருமபுரம், புளியம்பொக்கணை, கல்மடு நகர், விசுவமடு, கல்லாறு, கண்ணகிநகர், தொட்டியடி, தேராவில் ஒருபகுதி, விசுவமடு விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### கல்வியின் சிறப்பு



என்றேனும் ஒருநாள் நாம் இறக்கத்தான் வேண்டும். அந்த இறப்பு ஓர் உயர்ந்த குறிக்கோளுக்காக அமையட்டும். ஒரு நல்ல குறிக்கோளுக்காக உயிர்துறப்பது மேலல்லவா?

தமக்காக வாழாது பிறருக்காக வாழ்பவர்கள் ஆவர். பிறரெல்லாம் வாழ்ந்தாலும் வீழ்ந்தவர்களே இறந்துபட்டவர்களே ஆவர். பயனற்ற கோபத்திலும் எரிச்சல்படுவதிலும் நமது சக்தியை வீணாக்காது அமைதியோடும் ஆண்மையோடும் செயலாற்றுவோம், வாழ்த்திடுவோம்.

மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவது கல்வியாகும். எத்தகைய பயிற்சியின் மூலம் மன உறுதியின் வேகமும் அதன் வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு பயன்தரும் வகையில் அமைகிறதோ அந்தப் பயிற்சி தான் கல்வியாகும். (தொடரும்)

# கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணம் -2020 ஹாட்லியைற்ஸ் அணி 2வது சுற்றுக்கு தகுதி



கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம் -2020 தொடரில் முதலாவது சுற்றில் 5 ஆவது போட்டி கடந்த 13 ஆம் திகதி சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் ஹாட்லியைற்ஸ் அணி யூனியன்ஸ் அணியை 7 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2 ஆவது சுற் றுக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 30 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களை பெற்றது. போட்டியில் சேயோன் 36, ராஜ்குமார் 52, பிரசாந் 12 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் யூனியன்ஸ் அணிசார்பாக பிரசாத், ரகுபதி 3, மோகன்ராஜ், சுயந்தன் ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 28.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 140 ஓட்டங்களை பெற்றது. போட்டியில் ஆகீசன் 32, மோகன்ராஜ் 31, லவன்ராஜ் 24, பிரவீன் 17 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் ஹாட்லியைற்ஸ் அணி சார்பாக புருசோத் 5, பிரசாத், சத்யன், சேயோன் 1, மனோகரன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றிபெற்ற ஹாட்லியைற்ஸ் அணி இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள 2 ஆவது சுற்றில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# மின்னலடியாக்கி விளையாட்டுக்கழக கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள்



சண்டிலிப்பாய் இந்து விளை யாட்டு கழகம்



ஆவரங்கால் மத்தியவிளையாட்டுக்கழகம்

தெல்லிப்பழை மின்னலடியாக்கி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் யாழ் மாவட்டத்திற்கு உட்பட்ட A, B பிரிவைச் சேர்ந்தவர்களிற்கான மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்றையதினம் A, B பிரிவைச் சேர்ந்தவர்களிற்கான அரை இறுதிப்போட்டி நடைபெற்றது.

இதில் 'B' பிரிவினருக்கு உரிய போட்டியில் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக்கழக அணியினரை எதிர்த்து புத்தூர் கலைமதி (B) விளையாட்டுக் கழக அணியினர் மோதினர். இப்போட்டியானது 5 சுற்றுக்களை கொண்ட போட்டியாக அமைந்தது.

முதல் சுற்றில் புத்தூர் கலைமதி (B) விளையாட்டுக்கழக அணி 25:17 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்தது. மேலும் இரண்டாவது சுற்றுப் போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது. இச்சுற்றில் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழக அணி 25:23 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்து அடுத்ததாக மூன்றாவது சுற்றிலும் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழக அணியினர் 25:19 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்தனர். அடுத்ததாக நான்காவது சுற்று நடைபெற்றது. இச்சுற்றிலும் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக்கழக அணியினர் 25:20 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்து அடுத்தடுத்து மூன்று சுற்றுக்களையும் கைப்பற்றி வெற்றியை பெற்று இறுதிச் சுற்றுக்கு முன்னேறினர்.

2ஆவது A பிரிவினருக்கான அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியினரை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் மோதியது. இப்போட்டியின் முதல் சுற்றில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியினர் 25:17 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்தனர். இரண்டாவது சுற்று மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது. இச்சுற்றிலும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியினர் விறுவிறுப்பாக விளையாடி 25:19 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்தனர். அடுத்ததாக மூன்றாவது சுற்றில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் 25:22 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்தனர். அடுத்ததாக நான்காவது சுற்று நடைபெற்றது. இச்சுற்றில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியினர் 25:15 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்து அரையிறுதிப்போட்டியில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகினர். (4)

# நொதேன் பிறீமியர் லீக் - 2K20 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டிகள்




- நோ நேம் கிரிக்கெட் கிளப் எதிர் ஜப்னா றோயல்ஸ்
- ஜப்னா றோயல்ஸ் - 89/7
- நோ நேம் கிளப் - 95/2
- நோ நேம் 8 விக்கெட்டுக்களால் வெற்றி
- ஆட்ட நாயகன் -விமல்ராஜ் -34 ஓட்டங்கள்.




- AA சுப்பர் கிங்ஸ் எதிர் கொக்குவில் ஸ்ரார்ஸ்
- கொக்குவில் ஸ்ரார்ஸ் - 65/10
- AA சுப்பர் கிங்ஸ் - 71/2
- AA சுப்பர் கிங்ஸ் 8 விக்கெட்டுக்களால் வெற்றி
- ஆட்ட நாயகன் - சுஜன்- 3 விக்கெட்டுக்கள்



- அரியாலை கில்லாடி 100 எதிர் ஜப்னா றோயல்ஸ்
- ஜப்னா றோயல்ஸ் - 64/8
- அரியாலை கில்லாடி 100 - 65/5
- அரியாலை கில்லாடி 100 5 விக்கெட்டுக்கள்.
- ஆட்ட நாயகன் - அருண்ராஜ் 18 ஓட்டங்கள், 2 விக்கெட்டுக்கள்



- AA சுப்பர் கிங்ஸ் எதிர் வல்வை றைனோஸ்
- AA சுப்பர் கிங்ஸ் - 103/6
- வல்வை றைனோஸ் - 105/3
- வல்வை றைனோஸ் 7 விக்கெட்டுக்கள்
- ஆட்ட நாயகன் - ஜொனி - 69 ஓட்டங்கள்

## வலம்புரி பத்திரி...

4.30 மணியளவில் வலம்புரிப் பத்திரிகை விநியோகப் பணிக்காக சுன்னாகம் கந்த ரோடை வெளிப்பகுதியில் சென்று கொண்டிருந்தபோது இனந்தெரியாத 4 பேர்கொண்ட கும்பல் மதனகரனை வழிமறித்து கண்ட பாட்டில் தாக்குதல் நடத்திவிட்டு அவரின் மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்தொலைபேசி என்பவற்றை அபகரித்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

குறித்த பணியாளர் படுகாயமடைந்த நிலையில் அவசர நோயாளர் காவுவண்டியின் உதவியுடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை வலம்புரி பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் மீது கடந்த மாதம் 21ஆம் திகதி பிறவுண் வீதியில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டதோடு அவரது மோட்டார் சைக்கிளும் அடித்து நொருக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3,8)

## கட்டப்பிராயில்...

வீதியில் வேகமாக பயணித்துக் கொண்டிருந்த பேருந்து மோதியதாலேயே விபத்து ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## அரசியல் சாராத...

தமிழ் மக்கள் பேரவை கையாள்வதற்கான சூழலை ஏற்படுத்தும் நோக்கிலேயே இணைத் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளதாக நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவையின் முக்கியஸ்தர்களுடன் இது தொடர்பாக தான் நேற்று காலையில் பேசியதாகவும், தமிழ் மக்கள் பேரவையை கட்சி சார்பற்ற வகையில் ஒரு மக்கள் இயக்கமாக முன்னெடுத்துச் செல்வதற்கு ஏதுவான நிலையை உருவாக்குவதற்காக இவ்வாறு தான் இணைத் தலைமைப் பதவியை இராஜினாமா செய்துள்ளதாகவும் விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ம-3,8)

## தமிழ்க் கட்சிகள்...

மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு எதிராக எல்லா அரசியல் கட்சிகளையும் ஒன்றுதிரட்டி எவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் போராட்டங்களை நடத்தலாம் என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நான் வரவேற்கின்றேன்.

இத்தகைய செயற்பாடுகள் இன்றைய காலத்துக்கு மிகவும் அவசியமானவை என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இத்தகைய செயற்பாடுகள் அரசியல் கட்சிகளை மட்டுமன்றி ஏனைய பொது அமைப்புக்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கி அரசியல் சாராத வகையில் முன்னெடுக்கப்படுவதே பொருத்தமானதாகவும் நிலையானதாகவும் அமையும்.

இவ்வாறான போராட்டங்கள் மற்றும் முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்காகவே தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது.

கடந்த காலங்களில் இத்தகைய பல்வேறு செயற்பாடுகளை தமிழ் மக்கள் பேரவை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.

தமிழ் மக்கள் பேரவை ஒரு அரசியல் சார்ந்த அமைப்பு அல்ல. ஆகவே, மாவை சேனாதிராஜா தற்போது மேற்கொண்டிருக்கும் முன்னெடுப்புக்களை தமிழ் மக்கள் பேரவையின் ஊடாக மேற்கொள்வது பற்றி சிந்திக்க வேண்டும் என்றும் தமிழ் மக்கள் பேரவையில் அவரும் இணைந்து அதன் செயற்பாடுகளை பலப்படுத்துவதற்கு முன்வர வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

ஒரு அரசியல் கட்சியின் தலைவராக இருந்துகொண்டு தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர் பதவியை நான் வகிப்பது பொருத்தமானது அல்ல. ஏனைய அரசியல் கட்சிகள் இதில் இணைவதற்கும் பேரவையின் செயற்பாடுகளை பலப்படுத்துவதற்கும் இது தடையாக அமையும்.

இதனால், பேரவையின் இணைத் தலைவர் பதவியில் இருந்து ராஜினாமா செய்வதாக நான் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தும் பேரவையின் உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளாததால் தொடர்ந்தும் அந்த பதவியை வகித்து வந்தேன்.

ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை மாற்றங்களின் கீழ் தமிழரசுக் கட்சி மற்றும் ஏனைய தமிழ் தேசிய அரசியல் கட்சிகளும் பேரவையில் இணைந்து மாபெரும் வெகுஜன கட்டமைப்பாக பேரவையை கட்டியெழுப்பி அதன் செயற்பாடுகளை முன்னெடுக்க வழி ஏற்படுத்தும் வகையில் பேரவையின் இணைத் தலைவர் பதவியில் இருந்து விலகுவது என்று தீர்க்கமான முடிவினை எடுத்துள்ளேன்.

இதனை பேரவைக்கு இன்று (நேற்று) அறிவித்துள்ளேன்.

தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பங்காளி கட்சிகள் பேரவையில் அங்கம் வகித்து அதன் செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கும். தனிப்பட்ட ரீதியில் நான் என்னாலான சகல ஒத்துழைப்பையும் பேரவைக்கு வழங்குவேன்.

இதேவேளை, ஏற்கெனவே மாவை சேனாதிராஜா மேற்கொண்டுள்ள வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் அடுத்த வாரம் முன்னெடுக்கவிருக்கும் போராட்டத்துக்கு தமிழ் மக்கள் தேசிய கூட்டணி தனது முழுமையான ஆதரவை வழங்கும். இந்த போராட்டத்தை நடத்துவதற்கு மிகவும் குறுகிய காலமே இருப்பதால் ஏற்கெனவே திட்டமிடப்பட்டபடி இந்த போராட்ட ஏற்பாடுகள் நடைபெறுவதே பொருத்தமானது.

நடைபெறவிருக்கும் இந்த போராட்டம் எல்லா தமிழ் தேசிய அரசியல் கட்சிகள், தமிழ் மக்கள் பேரவை மற்றும் பொது அமைப்புக்களும் உள்வாங்கப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இந்த போராட்டம் தொடர்பான ஆலோசனை கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு அவர்களையும் உள்வாங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## தமி...

கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமிழ் மக்களின் ஜனநாயக உரிமையை தடுக்கும் விதமாக அரசாங்கம் அஞ்சலி தடையை விதித்துள்ளதாகவும், இது ஐ.நாவில் அங்கீகரிக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளை மறுக்கும் செயல் என்றும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

அன்னை பூபதி, மாவீரர் நாளுக்கும் இந்த தடை தொடருமென்பதால், இதை அனுமதிக்க முடியாது, அடிப்படை உரிமைகளை மீளப்பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

இறந்தவர்களை அஞ்சலிக்கவும், கௌரவிக்கவும் உள்ள தமிழ் மக்களின் உரிமையை உறுதிப்படுத்தும்படி உடனடியாக அனைத்து தமிழ் கட்சிகளும் கையெழுத்திட்டு ஜனாதிபதி, பிரதமருக்கு கடிதம் மூலம் கோருவதென தீர்மானிக்கப்பட்டது.

உடனடியாக இந்த கடிதத்தை அனுப்புவதென்றும், அதற்கு அவர்களின் பதிலை பொறுத்து அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

அரசுக்கு எதிரான ஜனநாயக வழி போராட்டங்களை அறிவிக்க வேண்டுமென பலரும் வலியுறுத்திய போதும், முதலில் அரசுக்கு ஒரு வாய்ப்பளிக்கும் விதமாக, ஒரு கடிதத்தை அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த கடிதத்திற்கு அரச தரப்பின் பதிலை பொறுத்து, மீளச் சந்தித்து அடுத்த கட்டம் தீர்மானிப்பதென முடிவானது. (ம-3,6)

## பகிரங்கமாக...

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

ராகிங்கும் ஒன்லைனிற்கு சென்றுள்ளது. பலாலி இராணுவ முகாமில் லெப்டினட் தர அதிகாரியாக உள்ள உளவியல் பெண் வைத்தியர் ஒருவரின் சகோதரனும் ராகிங் செய்யப்பட்டுள்ளார். அவர் எனக்கு தொலைபேசியில் அழைத்து விடயத்தை தெரிவித்தார்.

சைபர் குற்றத்தில் ஈடுபட்ட மாணவர்கள் என்ன கேட்டார்கள் என்பதை நான் சொன்னால், நீங்கள் திணறிப் போய் விடுவீர்கள்..

பொது இடத்தில் சொல்ல முடி யாதது. சட்டையை கழற்றி உடம்பை காட்டுவது மாத்திரமல்ல. அதற்கு மேலாகவும் கேட்கப்பட்டது. இது தொடர்பில் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)































10வருட வெற்றிகரமான சேவையில்....

## கனடாவில் உயர்கல்வி

**குறைந்த கட்டணத்தில்**
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது வீசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்

புதிய பிரிவுகள் ● திருமணமாகி லண்டன் செல்பவர்களுக்கான LIFESKILLS A1 வகுப்புக்கள் மற்றும் GERMAN A1 வகுப்புக்கள் IELTS வகுப்புக்கள் 02.09.2020 அன்று காலை 10 மணிக்கு ஆரம்பம்.

இலவச பதிவுகளுக்கு : 0779265447 (please call at 10am - 5pm)

யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில் கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...

**WORLD EDUCATION CONSULTANCY**
அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.
**0779265447 / 0217200989**

## WIN REPAIR

இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி எமது நிறுவனம் வாடிக்கையாளர்களாகிய உங்கள் வீட்டிற்கே வந்து சகலவிதமான குளிர்சாதனப் பெட்டி களையும், A/C களையும் மிகக் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் திருத்தித் தருகின்றோம்.
முதலில் தொடர்பு கொள்ளும் 50 வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பரிசில்களும் வழங்கப்படும். (4016)

**077 964 8942**
**077 841 1314**

## வீடு விற்பனைக்கு

மானிப்பாயில் 2 1/2 பரப்புக் காணியுடன் நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
(சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம்.)
**தரகர்கள் தேவையில்லை.** (C-354)

**077 778 7545**

WESTERN UNION WU
moving money for better

உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

Authorised Agent
**SRI MURUGAN**
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## விற்பனைக்கு

நல்லின பசுக்கன்று விற்பனைக்கு உண்டு. (C-352)

**தொடர்பு : 077 663 1742**

## விற்பனைக்கு

அலுவலகத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. [ Computer tables and Chairs (DAMRO ) ] (3895)

**தொடர்பு : 076 691 1081**

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு (4014)
**077 340 5951**
e-mail : engchelvam@gmail.com

## நாய் குட்டிகள் விற்பனைக்கு

அல்சேசன் கலப்பு பெண் குட்டிகள் பூச்சிமருந்து மற்றும் பாவோ தடுப்பு மருந்து கொடுக்கப்பட்ட 7 வாரம் நிரம்பியவை. (4011)

சனி, ஞாயிறு மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு : 077 754 3368**
மானிப்பாய்

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது (இருபாலாரும்) (C-112)

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் **V2 TRAVELS**

எமது கிளைகள்
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, கொடிகாமம், வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்
● ஆரம்ப சம்பளம் -15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com

## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1250/= (C-332)
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை

லண்டன்-1050/= , பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-கொலன்ட்- 1150/=
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1400/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
வெளிநாட்டில் வரி அறவிடப்படும் சாத்தியம் உள்ளது

இந்தியா - டுபாய் - சைனா போன்ற நாடுகளில் இருந்து பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்ள தொடர்புகொள்ளவும்

070 330 5500 | 077 888 9388 | 075 330 5500

976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | 355, A9 வீதி கந்தசுவாமிகோவிலடி கிளிநொச்சி | சங்கானை நெல்லியடி சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கனகராயன்குளம் மல்லாவி /துனுக்காய் மன்னார்/வவுனியா

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS**
Care Giver Course - பராமரிப்பாளர் பயிற்சி நெறி
சிறுவர் பராமரிப்பு / முதியோர் பராமரிப்பு
விசேட தேவையுள்ளோர் பராமரிப்பு /வீட்டு பராமரிப்பு
● கனடாவில்/வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள
● படித்துக்கொண்டே 50'000/= சம்பளம் பெறலாம். (C-112)
CIMS
அனுமதிகளுக்கு-0777-069-777

## காணி விற்பனை

சுன்னாகம் Town இல், Cargills Food City, வங்கிகளுக்கு அருகாமையில் K.K.S வீதியிலிருந்து 75 m தூரத்தில் 1 1/4 பரப்பு காணி விற்பனைக்கு.
பரப்பொன்று 55 இலட்சம்.
விலை பேசித் தீர்மானிக்கலாம். (3871)

**தொடர்பு : 077 794 7546**

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK- 1025 /=Kg
0768226240

எமது நேரடிக்கிளைகள் (C-112)
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## அமெரிக்க லொத்தர் விசா

2020
நீங்களும் இந்த ஆண்டு அமெரிக்க லொத்தர் விசா அதிஸ்டசாலி ஆகலாம்.
இறுதி நேர ஏமாற்றத்தினை தவிர்த்திட
உடனடியாக கடவுச்சீட்டினை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள் (C-112)
என்றும் உங்கள் மீது அக்கறையுடன் V2 TRAVELS
0768226244

# 1ஆம் ஆண்டு நினைவாக...

அமரர்
## நகுலேஸ்வரன் யோகரஞ்சனி
(சுமதி)




நம்ப மறுக்குதம்மா எம் இதயம்
நீ பிரிந்து ஒரு வருடம் சென்றாலும்
உன் அழகிய சிரிப்பும்
இனிமை நிறைந்த பேச்சும்
எல்லோரையும் ஈர்க்கும் உன்
வசீகரப் புன்னகையும்
உன் உடலை விட்டு உயிர் பிரிந்ததை
அறிந்து இதயமே உறைந்து போய்
நின்றதை யாரறிவர்?
நீ இறக்கவில்லை
எங்களுடன் உயிரோடுமிராய்
என்றுமே நிலைத்திருப்பாய்.

மலர்வு
27.01.1967

உதிர்வு
19.09.2019

குடும்பத்தினர்

(C-350)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.